மாலை : 49 மணி : 8 ஆகஸ்ட் 2007 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு





# அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை - 26.

## திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா
## நன்கொடை வேண்டுகோள்

பேரன்புடையீர்! வணக்கம்,

திருமுருகன் தலங்களுள், தொன்மை வாய்ந்த தென் பழநியில் பழநியாண்டியாகவும், சென்னையம்பதியில், வடபழநியில், வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அளித்து கலியுக வரதனாகவும் கண்கண்ட தெய்வமாகவும் எழுந்தருளியிருப்பவர் அருள்மிகு வடபழநி ஆண்டவர்.

**ஆன்மாக்கள் உய்யவும், நாட்டு மக்கள் நலமுடன் வாழவும் வேண்டி, நிகழும் ஆகஸ்ட் மாத இறுதியில் அருள்மிகு வடபழநி ஆண்டவர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா எல்லாம் வல்ல வடபழநியாண்டவரின் திருஉள்ளப் பாங்கின்படி நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

இப்புனிதமான நிகழ்வுக்கு மெய்யன்பர்களிடம் நன்கொடைகள் வரவேற்கப்படுகிறது.

நன்கொடை செலுத்த விரும்பும் அன்பர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் செலுத்தி, இரசீது பெற்றுக் கொள்ளுமாறும் நேரில் வரஇயலாத அன்பர்கள் மணியார்டர், வரைவோலை மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். திருப்பணி குறித்த விபரங்களுக்கு திருக்கோயில் அலுவலகத்ினை தொடர்பு கொள்ளவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


துணை ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்
வடபழநி, சென்னை - 600 026. தொலைபேசி 2483 6903
Email : vadapalaniandavar@vsnl.net Website : www.vadapalaniandavartemple.com


நடைபெறவுள்ள திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில், தாங்கள் கலந்து கொண்டு அருள்மிகு வடபழநி ஆண்டவரின் அருள்பெற அன்புடன் வேண்டுகிறோம்.

அனைவரும் வருக!
இன்பமே சூழ்க

**நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்**
**நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்**
**அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்**
**ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்**

இறையருள் பெறுக!
எல்லோரும் வாழ்க!

இங்ஙனம்


**அ.தி. பரஞ்ஜோதி**, எம்.காம்., பி.எல்., துணை ஆணையர் / செயல் அலுவலர்

**டாக்டர். சீர்காழி கோ. சிவசிதம்பரம்**, எம்.டி., அறங்காவலர் குழுத் தலைவர்

**செ. கண்ணப்பன், எம். பழநி, கண்மணி சீனிவாசன், ஆ. மணிமாறன்**
அறங்காவலர்கள்



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு | ஆண்டு 2038 மணி 8 | ஸர்வஜித்-ஆவணி ஆகஸ்ட் 2007

## அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

**"வாழ்க நீ: எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்**
**தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்**
**பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க: வாழ்க!"   - பாரதியார்**

தாய் திருநாடாம் நம் இந்தியத் திருநாட்டின் 60ம் ஆண்டு சுதந்திர தினத் திருநாளில் அடியெடுத்து வைக்கும்நாம், அன்னியரின் அடிமைத் தளையிலிருந்து விடுபட தன் இன்னுயிரையும் துச்சமென மதித்து மாய்ந்திட்ட தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திடுவோம். சாதி மத பேதங்களைத் தவிடு பொடியாக்கி தாய்த் திருநாட்டை தரணியில் புகழ் பெறச் செய்திடுவோம்.

ஆக்கம், அன்பு, செல்வம், இன்பம் எனும் எண்வகை செல்வங்களையும் அளித்திடும் தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கெஜலட்சுமி, வித்யாலட்சுமி எனும் எண்வகை லட்சுமியரையும் ஆவணித் திங்களில் வரும் வரலட்சுமி நோன்பு நாளன்று நோன்பிருந்து வேண்டி சகல செல்வங்களையும் பெற்று வாழ்வில் வளம் பெறுவோமாக.

காலங்கள் பல கடந்தாலும், யசோதை மைந்தனான கிருஷ்ணரின் லீலைகள் களிப்பூட்டத்தக்கவையாகவே இன்றும் இருந்துவருகிறது. அவன் செய்த லீலைகள் குழந்தைகளுக்கு விளையாட்டாக இருக்கும். அவன் செய்த லீலைகளின் தத்துவார்த்தங்களை அறிந்தவர்க்கோ அது பேரானந்தமாக இருக்கும். அவ்வகையில் யசோதையின் பாசப்பிணைப்பில் தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட மணிவண்ணனின் கண்ணீர், ஆனந்தக் கண்ணீர் என யசோதை, கண்ணன், மணி எனும் மூவரும் ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளாமலேயே அவரவரும் உள்ளக் களிப்பு அடைந்த அனுபவப் பரிமாணத்தை "மணியும் மணிவண்ணனும்" எனும் தலைப்பிட்டு தனக்கே உரிய பாணியில் தெவிட்டாத தெள்ளமுதாக கற்பனை வளம் சொட்டச் சொட்ட வழங்கியுள்ளார் தமிழாசுரர் திரு. தெ. முருகசாமி அவர்கள்.

முருகப்பெருமானின் அளவிலாப் பெருங்கருணை நம்மை வந்தடைய அருள்புரியும் இச்சா சக்தியாக விளங்கி செயல்படும் வள்ளி நாச்சியாரை வாழ்த்தி "மாசிலா வள்ளி" எனும் தலைப்பில் சிறந்ததொரு படைப்பினை வழங்கியுள்ளார் டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் அவர்கள்.

தேவாரப்பாக்களின் அடியொற்றி திருக்களந்தையில் வீற்றிருக்கும் கயிலைநாதனின் மீது புதியதொரு திருக்களந்தைப் பதிகத்தைப் படைத்துள்ளார், பொறியியல் வல்லுநர் திரு.எம். குப்புசாமி அவர்கள். வளரும் சமுதாயம் இதுபோன்ற பதிகங்களைப் படைக்க இது ஒரு வழிகாட்டுதலாக இருக்கும் என்பதில் அய்யமில்லை.

எம்பெருமான் அரங்கன், திருப்பாணாழ்வார் கண்டு களிப்புற காட்சி தந்த கருணைத் திறத்தை ஆன்மீக எழுத்தாளர் திரு. எ. கிருஷ்ணன் அவர்களும், பகல்பத்து, இராப்பத்து உற்சவம் தோன்றிய விதத்தை திருவரங்கம் இந்திரா ஆரவமுதன் அவர்களும் வழங்கியுள்ளனர்.

பேராசிரியர் டாக்டர். சரசுவதி இராமநாதன் அவர்களின் கந்தர் அனுபூதித் தொடரும், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவலையாக அவர் வழங்கிய கந்தபுராண நுண்பொருள் தொடரும் இவ்விதழில் வெளிவந்துள்ளன.


வளங்களை வாரி வழங்கும் வடபழநி ஆண்டவர் திருக்கோயில், ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அணைக்கட்டாபுதூர் சிவன்கோயில், தென் திருப்பதி, பூலோக வைகுண்டம், திருவிண்ணார் மார்க்கண்டேய ஷேத்திரம் எனப் போற்றப்படும் அருள்மிகு வெங்கடாசலபதி ஒப்பிலியப்பன் திருக்கோயில், அகத்தியருக்கு மூலிகையின் தன்மை பற்றி பூரணமான தெளிவைத் தந்த திருவான்மியூர் மருந்தீசுவரரின் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் சிறப்புகள் திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

அனைவரும் இதழினைப் படித்து இன்பமுறுவோமாக.

அன்புள்ள

(த.பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை.
சென்னை - 600 034.



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

# கருணைக் கடல்
# காந்தியடிகள்

சந்தனமெடுத்துச் செய்த உருவமொன்று நடந்து வருகிறது. கையில் ஓர் ஊன்றுகோல் அதுவும், தரைக்கு வலிக்குமேயென்று அஞ்சியோ என்னவோ மெதுவாக ஊன்றப்படுகிறது. அருள் பொழியும் முகம். கனிவு ததும்பும் விழிகள். புன்னகையைத் தேக்கியிருக்கும் பொக்கை வாய்ப் பூவிதழ்கள். அவரைச் சுற்றி நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர். என்றாலும், அவர்கள் எல்லாம் பகல் நேரத்து விண்மீன்களாகவும், அவர் மட்டுமே கதிரவனாகவும் நம் கண்களுக்கு காட்சி தருகிறார். அவர் வாய்மையின் வடிவம். அன்பின் திருவுருவம். அவர் தான் கருணைக் கடல் காந்தியடிகள்.

அறவழியே அவர் வழி. அநியாயத்தை எதிர்க்கும்போது அவர் தன்னைத் தானே பலி கொடுத்துக் கொள்ளவும் தயாராகக் களம் நோக்கிச் செல்வார். இந்திய மண்ணின் சுதந்திரத்தைப் பெற்றிட அவர் தியாக நெருப்பில் குளித்தார். அந்த நெருப்பிலிருந்து அவர் புடம்போட்ட தங்கமாக வெளி வந்தார். அடிமைத்தனம் எங்கிருந்தாலும் அவர் அதனைக் களைந்திடவே விரைந்தோடுவார். மனிதனை மனிதன் தீண்டக்கூடாது எனும் சாதிக்கொடுமையை வேரோடு வீழ்த்தக் கொடி தூக்கினார். சமுதாயத்தைச் சாய்க்கும் தீமைகளாம் குடியாட்டம், குதிரை ஓட்டம் முதலியவற்றை அறவே ஒழிக்க வேண்டுமென நாளெல்லாம் பாடுபட்டார். அமளிகள், கலகங்கள், குழப்பங்கள் எங்கு நடந்தாலும் அவை ஓயும் வரை உண்ணமாட்டார், உறங்கமாட்டார், மகாவீரரைப் போல், புத்தரைப்போல்,


"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்."

என்றுரைத்த வள்ளுவரைப்போல் வாழ்ந்து காட்டியவர் அவர். அந்த உலக உத்தமர்தான் அதோ வருகிறார்.

மேற்றிசையில் கதிர் மறையும் நேரம், இளங்காற்று மென்மையாக வீசி, அவரை வலம் வருகிறது. அவர் அந்த மேடையில் அமர்ந்து இறைவணக்கம் தொடங்கப் போகிறார். அவரோடும் அவர் இதய உணர்வுகளோடும் இணைந்து அங்குள்ள நல்லோர் அந்த வணக்கப்பாடலை இசைக்கப் போகின்றனர். எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்து ஏங்கிய விழிகளுக்கு விருந்தாக, எப்பிணியையும் நெஞ்சிலிருந்து நீக்கும் மருந்தாக,அவர் வந்துவிட்டார்.

அங்குள்ளோர் கரங்கள் அனைத்தும் மலர்ந்த பூக்கள் மீண்டும் மொட்டானது போல் விளங்குகின்றன. ஆம், அனைவரும் அவரை வணங்குகின்றனர். அவரும் வணங்குகிறார். அந்த வணக்கத்தைச் சூழ்ந்திருந்தோர் வாழ்த்தாக எண்ணிக் கொள்கின்றனர். காலமுணர்த்தும் கருவி அவரது இடுப்பிலே ஆடிக் கொண்டிருக்கிறது. கூப்பியிருந்த கரங்களில் ஒரு கரம் அவரை நோக்கி நகருகிறது. கூட்டத்திலிருந்தவர்களைப் பின்னுக்கு தள்ளிவிட்டு, அந்த மனிதன் மட்டும் அவரருகே செல்கிறான். 'ஏன் அருகே செல்கிறான்?' என்று நினைப்பதற்குள்ளாக, அவன் அவரை தாழ்ந்து வணங்குகிறான். அந்த தும்பை மலர் உள்ளம் அவன்மீது அன்பை அள்ளி வீசுகிறது, அம்மவோ! அந்த கொடியவனின் கும்பிட்ட கைக்குள்ளே கொலைக்கருவி பதுங்கியிருக்கிறது. அந்தக் கைத்துப்பாக்கி, திடீரென அந்த இடத்தின் அமைதியைக் கெடுக்கிறது. அசைபோட்டவாறு கண்மூடியிருக்கும் பசுவின்மீது புலியொன்று பாய்ந்தது போல் அந்த அமைதியான சூழ்நிலையின்மீது வேட்டுச் சத்தம் தாக்கியது.

அமைதி அழிந்தது! இருள் மூடிக்கொண்டது. இதயப் பகுதியிலிருந்து குருதி வெள்ளம்



பெருக்கெடுக்க, அந்த எளிய உருவம், ஏழைகளின் நம்பிக்கை விளக்கு, பூமியில் சாய்ந்துவிட்டது. தொழுத கைக்குள்ளிருந்த படை, நாட்டுத் தந்தையின் உயிரைக் குடித்துவிட்டது. இது போலவும் நடக்கக்கூடும் என்பதை வள்ளுவரின் நுண்ணறிவு எப்படித்தான் முன்கூட்டி உணர்ந்திருந்ததோ!

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து."

பகைவர்கள் வணங்குகின்றபோது அவர்களின் கைக்குள்ளே கொலைக்கருவி மறைந்திருக்கும்; அவர்கள் கண்ணீர் கொட்டி அழுவதும் அப்படிப்பட்டதே என்று அடையாளங் காட்டுகிறார் அவர்! அண்ணல் காந்தியடிகளின் முடிவு இந்தக் குறளை மெய்ப்பிக்கும் எடுத்துக் காட்டல்லவா?

அதிகாரம் 83 கூடாநட்பு பாடல் 828

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்**

**குறளோவியம் நூலிலிருந்து**

நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே


1. அருள்மிகு மாரியம்மன் 108 போற்றிகள் - 4
2. மணியும் மணிவண்ணனும் - தமிழாகரர் தெ. முருகசாமி - 6
3. மாறிலா வள்ளி டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன், எம்.ஏ., பி.எச்.டி., - 11
4. திருப்பாணாழ்வார் ஆன்மிக எழுத்தாளர் திரு. எ. கிருஷ்ணன் - 15
5. அருள்மிகு வடபழநி ஆண்டவர் - 17
6. அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் - ஒப்பிலியப்பன் கோயில் - 19
7. ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அணைகட்டாப்புத்தூர் சிவன் - 23
8. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன் - 25
9. திருக்களந்தைப் பதிகம் பொறியியல் வல்லுநர் திரு. எம். குப்புசுவாமி - 28
10. வேலும் மயிலும் துணை பேராசிரியர் டாக்டர் சரசுவதி இராமநாதன் - 30
11. பகல்பத்து இராப்பத்து உற்சவம் இந்திரா ஆராவமுதன் - 32
12. கந்தபுராண நுண்பொருள் திருமுருக கிருபானந்த வாரியர் சுவாமிகள் நினைவலைகள் - 34
13. அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருவான்மியூர் - 37

# அருள்மிகு மாரியம்மன்

## 108 போற்றிகள்



1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் அலகு அணிந்தார்க்கு அருள்வாய்போற்றி
3. ஓம் அலர்மேலு மங்கையும் ஆனாய் போற்றி
4. ஓம் அறுகோணத்து உள்ளிருக்கும் ஆதி போற்றி
5. ஓம் அனலும் தணலும் ஆவாய் போற்றி
6. ஓம் அன்னம் அளிக்கும் அன்னமே போற்றி
7. ஓம் ஆதிசிவன்தேவி அம்மையே போற்றி
8. ஓம் ஆதியில் உமையாய் ஆனாய் போற்றி
9. ஓம் ஆயிரம் கண்ணுடை அம்மா போற்றி
10. ஓம் ஆரணிப் பாளையத்து அம்மா போற்றி
11. ஓம் ஆறுதப்பு நூறுபிழை பொறுப்பாய் போற்றி
12. ஓம் ஆறு ஆதாரமாம் அணங்கே போற்றி
13. ஓம் ஆற்று மணல் லிங்கம் அமைத்தாய் போற்றி
14. ஓம் ஈசன் பங்கில் இருப்பாய் போற்றி
15. ஓம் உடுக்கையில் பாம்பை உயர்த்தாய் போற்றி
16. ஓம் உன்னைப் பணிந்தவர்க்கு உற்ற துணை போற்றி
17. ஓம் ஊத்துக்காட்டின் உறவே போற்றி
18. ஓம் எங்கும் நிறைந்த நிறைவே போற்றி

19. ஓம் எச்சிலும் தீட்டும் ஏற்பாய் போற்றி
20. ஓம் எட்டெழுத்தாகி இனிப்பாய் போற்றி
21. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி
22. ஓம் எல்லார்க்கும் தாயாய் இருப்பாய் போற்றி
23. ஓம் ஏழையர்க்கு அடைக்கலம் ஆனாய் போற்றி
24. ஓம் ஒப்பேதுமில்லா உயர்வே போற்றி
25. ஓம் ஓங்காரமென்னும் உருவே போற்றி
26. ஓம் கச்சிப்பதியின் காமாட்சி போற்றி
27. ஓம் கடும்பாடி எல்லையெல்லாம் காப்பாய் போற்றி
28. ஓம் கடைக்கண் நோக்கம் அருள்வாய் போற்றி
29. ஓம் கண்ணபுரத்தின் காரணி போற்றி
30. ஓம் கரகத்தில் அமரும் கருமாரி போற்றி
31. ஓம் கலியுகம் கண்ட திரிபுரை போற்றி
32. ஓம் கற்பகம் அருளும் காமதேனு போற்றி
33. ஓம் கனகசபை நடத்தும் கபாலி போற்றி
34. ஓம் காசிவன நாட்டிலே கன்னியாகுமரி போற்றி
35. ஓம் குப்பத்திருக்கும் கொலுவே போற்றி
36. ஓம் கும்பத்தின் மீதிருந்து கொஞ்சுவாய் போற்றி
37. ஓம் கைலாசத்தின் காவலே போற்றி
38. ஓம் கோலியனூரின் கொலுவே போற்றி
39. ஓம் சந்நிதிக்கெல்லாம் சந்நிதி போற்றி
40. ஓம் சந்தேகம் நீக்கும் சாயுச்சியே போற்றி
41. ஓம் சப்தகன்னியாய்ச் சமைந்தாய் போற்றி
42. ஓம் சமயபுரத்தின் தமிழே போற்றி
43. ஓம் சாம்பிராணி வாசமாய்ச் சார்வாய் போற்றி
44. ஓம் சிங்கம் ஏறும் சிறப்பே போற்றி
45. ஓம் செக்கச் சிவந்த சிங்காரி போற்றி
46. ஓம் செடிலும் தேருமாய்ச் சிறப்பாய் போற்றி
47. ஓம் சூலம் ஏந்தும் சுடரே போற்றி
48. ஓம் சூனியம் எல்லாம் சுடுவாய் போற்றி
49. ஓம் சேலம் கோட்டைச் சிறப்பே போற்றி
50. ஓம் தண்டு மாரியாய்த் தழைப்பாய் போற்றி
51. ஓம் திண்டுக்கல் கோட்டையில் திளைப்பாய் போற்றி
52. ஓம் திருநீற்றுக்கோட்டை திகம்பரி போற்றி
53. ஓம் திருவிளக்கின் நாயகத்திறமே போற்றி
54. ஓம் திருவேற்காட்டு தேவி போற்றி
55. ஓம் தில்லைவனத்தின் திருவே போற்றி
56. ஓம் தீராவினையெல்லாம் தீர்ப்பாய் போற்றி
57. ஓம் தெய்வக்கொலுவில் திளைப்பாய் போற்றி
58. ஓம் தேசமெல்லாம் முத்தெடுக்கும் தேவி போற்றி
59. ஓம் தேசவிளக்கெலாம் ஆனாய் போற்றி
60. ஓம் நம்பினோர் நாவில் நவில்வாய் போற்றி
61. ஓம் நாகக்கன்னியே நல்லமுத்து போற்றி
62. ஓம் நாகக்கடையில் நடப்பாய் போற்றி
63. ஓம் நாகம் அணிந்த நங்கை போற்றி
64. ஓம் நாடும் வீடும் காப்பாய் போற்றி
65. ஓம் நாற்கோணச் சக்கரத்தை நாடுவாய் போற்றி
66. ஓம் நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி போற்றி
67. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
68. ஓம் நோவுநொடிக்கோர் மருந்தே போற்றி
69. ஓம் பகைத்தவர் மார்பைப் பிளப்பாய் போற்றி
70. ஓம் படவேட்டில் அமர்ந்த பராசக்தி போற்றி
71. ஓம் பட்டத்தழகி படைமுகத்தாய் போற்றி
72. ஓம் பண்ணாரி வாழும் பராபரி போற்றி
73. ஓம் பாதாளம் எல்லாம் பரந்தாய் போற்றி
74. ஓம் பார்வதியாகிப் பரிந்தாய் போற்றி
75. ஓம் பாவாடைக்காரி பராபரியே போற்றி
76. ஓம் பில்லி பிசாசுகள் அகற்றுவாய் போற்றி
77. ஓம் பிள்ளை வரம் தரும் பெரியாய் போற்றி
78. ஓம் புவனமெல்லாம் போற்றும் பூவழகி போற்றி
79. ஓம் பூரணமாகிய பொலிவே போற்றி
80. ஓம் பூவாய்ச் சொரியும் புதுமையே போற்றி
81. ஓம் பெரியபாளையத்தின் பேச்சியே போற்றி
82. ஓம் பெருமாளின் பின்னே பிறந்தாய் போற்றி
83. ஓம் மக்களுக்கு உகந்த மாதரசி போற்றி
84. ஓம் மகுடமுடிகொண்ட மனோன்மணி போற்றி
85. ஓம் மங்கை உருவின் மகராசி போற்றி
86. ஓம் மணிமந்திர சேகரித்தாயே போற்றி
87. ஓம் மணிவிளக்குமேல் ஏறும் மாதா போற்றி
88. ஓம் மலையனூர் மகிழ்ந்த மாண்பே போற்றி
89. ஓம் மலையாள தேசத்து மகமாயி போற்றி
90. ஓம் மழையாய் விளங்கும் மாரி போற்றி
91. ஓம் மாங்கல்யம் காக்கும் மங்கலி போற்றி
92. ஓம் மாயி மகமாயித்தாயே போற்றி
93. ஓம் முக்கோணத்துள் மூலப்பொருளே போற்றி
94. ஓம் முத்துவடம் அசையும் முலைப்பால் போற்றி
95. ஓம் மூலாதாரத்தின் முதல்வி போற்றி
96. ஓம் யாதும் ஆகி நின்றாய் போற்றி
97. ஓம் வணங்குவோர்க்கு வாழ்க்கை அளிப்பாய் போற்றி
98. ஓம் வந்தமனை வாழ வருவாய் போற்றி
99. ஓம் வருத்தம் தீர்க்கும் வளமே போற்றி
100. ஓம் வலியோர் மார்பைப் பிளப்பாய் போற்றி
101. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
102. ஓம் வாதபித்த சீதசுரம் காப்பாய் போற்றி
103. ஓம் வார்ப்புச் சிலையாய் வருவாய் போற்றி
104. ஓம் வீராம்பட்டணத்து விளக்கே போற்றி
105. ஓம் வெள்ளிக்கிழமை விளைவே போற்றி
106. ஓம் வேப்பம் பாலாய் விளைவாய் போற்றி
107. ஓம் வேப்பிலை செய்யும் விந்தையே போற்றி
108. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி

*அந்தந்த திருத்தலத்திற்குச் சிறப்பாக உள்ள*
*அருள்மிகு மாரியம்மன் பாடலுடன் 108 போற்றியை நிறைவு செய்திடல் வேண்டும்.*

# மணியும் மணிவண்ணனும்




திருமால் எடுத்த பத்து அவதாரங்களில் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் மிக முக்கியமானவை. மானுடத்தோடு தொடர்புடைய காரணத்தால் இவ்விரு அவதாரங்களும் அனைவராலும் போற்றப்பட்டன. இவ்விரு அவதாரங்களில் அரண்மனைக் குழந்தையாகப் பிறந்து வளர்ந்த இராமனைவிட, சிறையில் பிறந்து ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணனைக் கொண்டாடிய விதம் தனிச்சிறப்புடையதாகும். இதனை வேறு வகையாகச் சொன்னால், தசரதன் மக்கள் நால்வரில் இராமன் ஒருவன்; ஆனால் பெற்றவர்களாகிய வசுதேவர்-தேவகி, பெறாத பெற்றோராகிய நந்தகோபன்-யசோதை ஆகிய நால்வரும் கொண்டாடும் ஒருவனாக இருந்தான் கண்ணன் என்பதால் இராமனைவிடக் கண்ணன் அனைவராலும் கவரப்பட்டவனாகக் காணப்பட்டான். இவ்வேறுபாட்டுச் சிறப்பைப் பலர் அறிந்திருந்ததால்தான் கிருஷ்ணானுபவம் எனக்கூறியது போல இராமனுபவம் என எவரும் கூறாதது சிந்திக்கத்தக்கதாய் உள்ளது.

மேலும் செல்வக் குழந்தையான இராமனைத் தாய் கோசலையோ பிறரோ சீராட்டித் தாலாட்டி வளர்த்ததாக இராமாயணத்தில் பேசப்படவில்லை. பிற்காலத்தில் தியாகப் பிரம்மம் தியாகையர் மட்டுமே இராமனைக் கொண்டாடினார். ஆனால் ஆயற்பாடியில் தாய் யசோதை முதல் எல்லோரும் கண்ணனைக் கொண்டாடினார்கள். ஆண்டாள் கொண்டாடிய விதம் தனியானது. பிற்காலத்தில் பாரதி யார் கண்ணன் பாடலின் மூலம் அவனை அனுபவித்தார். இப்படி இராமனை விடக் கண்ணனைப் பலரும் அனுபவித்தாலும் தாய் யசோதை அனுபவித்ததான கற்பனை ஒன்று அனைவரையும் கவர்வதாக உள்ளதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

மாதவனை மனதில் தாங்கும் யாதவ குலப்பெண் யசோதை. 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர' என்றபடிக் கண்ணனைப் பெறாத யசோதை அவனைப் பெற்றவளாகவே பேசப்பட்டாள். இதுதான் கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் செய்த விளையாட்டில் (லீலை) யசோதை அனுபவித்த முதல் லீலாரசம். அடுத்து அவன் ஆயர்பாடியில் வளரும்போது பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றைத் திருடி உண்ட நேரத்தில் யசோதை அவனைப் பிடித்து உரலில் கட்டிப் போட்ட லீலாரசம் அலாதியானது. இதனை நம்மாழ்வார்,

"பத்துடை அடியவர்க் கெளியவன்
பிறர்களுக்கு அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம்
அரும்பெறல் அழகன்
மத்துறு கடைவெண்ணெய் களவினில்
உரவிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்து
ஏங்கிய எளிவே."



எனத் திருவாய்மொழியில் கண்ணபிரானின் எளிவந்த செயலைப் (சௌலப்யம்) பாடுகிறார்.

தமிழாகரர் தெ. முருகசாமி

பெறுதற்கரியவனாகிய எம்பெருமான், தாய் யசோதை மத்தையிட்டுக் கடையும் வெண்ணெய்யைத் திருடியதால் அவனிடம் பிடிபட்டதோடு மார்பின் இடையிலே தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் உரலோடு கட்டுண்டு கிடந்து ஏங்கிய எளிமைக் குணந்தான் எத்தகையது? என வியக்கின்றார் நம்மாழ்வார். (உரலிடை யாப்புண்டு-மார்போடு கட்டப்பட்டு) தன்னை உரலோடு கட்டிப் போட்டதற்குக் கண்ணன் ஏங்கினானோ இல்லையோ நம்மாழ்வார் அக்குழந்தை பட்டபாட்டை எண்ணி ஏங்குகிறார்.

இந்த ஏக்கத்தைப் பற்றி திருமங்கையாழ்வார் பலபடக்கூறி மனங் கரைகிறார். "உறியார் வெண்ணெய் உண்டு உரலோடும் கட்டுண்டு" எனத் திருநறையூர்த் திருமொழியிலும்

"வெண்ணெய்தான் அமுது செய்ய வெகுண்டு
மத்து ஆய்ச்சி யோச்சி
கண்ணியார் குறுங்கயிற்றால் கட்ட
வெட்டென் றிருந்தான்"

எனத் திருப்பேர்நகர் திருமொழியிலும் கண்ணனின் கட்டுண்டதைப் பாடி மனங்கரையும் திருமங்கையாழ்வார், திருக்கோவலூர்த் திருமொழியில் கட்டுண்ட நேரத்தில் கண்ணீர் விட்டுக் கலங்கினானே எனக் கலங்கிக் கூறுவது கண்ணன் மீது அவருக்கிருந்த பக்தி ரசத்தை உணர முடிகிறது.

"உறியார்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்றங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி உரலோ டார்க்க,
தறியார்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை
வெறியார்ந்த மலர்மகள் நாமங்கையோடு
வியன்கலை என்தோளினாள் விளங்கு
செல்வச் செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே."

இத்திவ்யத் திருமொழியில்,



உறியிலே உள்ள வெண்ணெயை மறைவாகச் சென்று திருடி உண்டதால் கையும் களவுமாகப் பிடிபட்ட நிலையில் யசோதை அவனை உரலிலே கட்டினாலும் அவன் கட்டுத்தறியிலே கட்டப்பட்ட மதர்த்த யானை போல இருந்தானாம்; அங்ஙனம் இருந்தாலும் அவன் கண்ணீர் மல்க நின்றானாம் என்று திருமங்கையாழ்வார் கண்ணனை அனுபவிக்கின்றார்.

அவன் கண்ணீர் மல்குவானேன்? என்பதைக் கற்பனை செய்தால் அவன் விட்ட கண்ணீர் அவலத்தால் விளைந்ததா? இல்லையா? என்பது தெரியவரும். கவலையால் அவன் கண்ணீர் விட்டிருக்க முடியாது. ஆனந்தக் கண்ணீர் என்னும் உவகைக் களிப்பால் கண்ணீர் சிந்தியிருப்பான் என்பதைக் கீழ்க்கண்டவாறு உணர்ந்தால் நாமும் கண்ணனை அனுபவித்தவர்களாவோம்.

அடுக்களையில் (சமையலறை) வேலை பார்த்திருந்த யசோதைக்குக் கண்ணனின் தொல்லை தாங்க முடியவில்லை. இதமாகச் சொல்லிப் பார்த்தாள், அதட்டியும் பார்த்தாள், பலன் இல்லை. காம, பேத, தானத்தைத் தாண்டிய தண்டனைக்கு வந்து விட்டான். அவன் மாயக்கண்ணன் அல்லவா? வைரத்தை வைரத்தால் அறுப்பதைப் போல அவனது மாயத்தை மாயத்தால் வெல்ல உபாயம் தேடினாள். முடிவில் பால், தயிர், வெண்ணெய் யானைகள் வைக்கும் உறியின் கீழே ஒரு மணியைக் கட்டித் தொங்க விட்டு விட்டாள்.

இளங்கன்று பயம் அறியாததைப் போலத் துள்ளிக் கொண்டே வழக்கமாக உறியிடம் வந்தான் கண்ணன். உறியின் கீழே தொங்கும் மணியைப் பார்த்தான்; முணுமுணுத்தான், மணியோ மௌனம் சாதித்தது, "சரி! நம்மைக் கையோடு பிடித்துக் கொடுக்க இம்மணி வந்தது" என எண்ணி



ஒப்பந்தத்தைக் கேட்ட மணியும் விளையாட்டாக அப்போது ஒப்புக் கொண்டதுபோலச் "சரி" என்றது.

மணியின் வாய்மொழியை நம்பிய கண்ணன் ஒவ்வொரு பானையாக எடுத்தான். முதல் இரண்டு பானைகளை எடுத்தபோது அடிக்காத மணி மூன்றாவது பானையை எடுத்தபோது அடித்து விட்டது. அவ்வளவுதான்! துவாரகையில் கண்ணனைக் கண்ட குசேலரின் பீறிட்ட மகிழ்ச்சி பொங்க கன்றுக்குப் பால் கொடுக்கக் கனைத்துக் கொண்டு ஓடி வரும் பாசம் மிக்க பசுவைப் போல யசோதை ஓடிவந்து கண்ணனைப் பிடித்து, தயாராக வைத்திருந்த தாம்புக்கயிற்றால் அவனது மார்பில் கட்டிய கயிற்றை உரலிலியே பிணைத்துப் போட்டுவிட்டு அடுக்களைக்குள் சென்று விட்டாள்.

விட்டு விடுதலையாகி வானில் பறக்கும் சிட்டுக் குருவிபோல் சிறைப் பிறப்பிலிருந்து விடுதலையாகி யசோதை வீட்டுக்கு வந்த கண்ணன் அந்த உரலின் உரசலுக்கா பயப்படுவான்? இருந்தாலும் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்றபடி ஒப்பந்தம் மீறிய மணியோடு மோதாமல் இதமாகப் பேச ஆரம்பித்தான்.

அதைத் தன் பக்கம் இழுத்து ஓர் கூட்டணியை உருவாக்கிக் கொள்ள மணியோடு பேசத் தொடங்கினான்.

"மணியே! என்றும் இல்லாமல் இன்று நீ புதிதாக வந்துள்ளாய்! உன் வரவேற்பின் ரகசியம் அறிவேன். என்னைக் காட்டிக் கொடுப்பதுதான் உன் வேலை! என்றாலும் நமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாமா! என்றான் கண்ணன். 'ஒப்பந்தம் என்ன என்றது?' மணி.

நீயும் மணி! நானும் மணி! அதாவது என்னை மணிவண்ணன் என்பார்கள். இந்தப் பெயர் ஒப்புமை நமக்குள் இருப்பதால் நாம் நண்பர்களாகி விட்டோம். எனவே நான் வழக்கமாகப் பால் தயிர்களைத் திருடி உண்ணும் போது என்னைக் காட்டிக் கொடுக்காதபடி நீ அடிக்காமல் இருக்க வேண்டும் என்றான் கண்ணன். கண்ணனின்

"மணியே! நமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன ஆச்சு? அப்படித்தான் அடிப்பதாக நீ முடிவெடுத்திருந்தால் முதல் பானை எடுத்தபோதே அடித்திருக்கலாமே! அல்லது இரண்டாவது பானைக்காவது அடித்திருக்கலாமே! இவ்விரண்டையும் விட்டுவிட்டு மூன்றாவது பானையின்போது அடிப்பானேன்! எனக் கொஞ்சலாகக் கெஞ்சின்னான் கண்ணன்.

ஏதோ சிகரம் தொட்ட சாதனை புரிந்து விட்டது போன்ற எக்களிப்பில் கெம்பீரமாக இருந்த மணி, "கண்ணா எனக்கு நாக்கிருந்து நான் அடித்துப் பழகியவனேயன்றிப் பேசத் தெரியாதவன். ஆனாலும் என்னை நீ பேசுமாறு ஒப்பந்தம் செய்து கொண்டபோதே உன்னால் உன்னையறியும் ஞானம் எனக்குள்

பிறந்துவிட்டது. ஆதலால் உன்னை யார்? என்று தெரிந்து கொண்டுவிட்டேன், ஆன்மாவைச் சோதித்து ஆட்கொள்ள வந்த பரமாத்மா நீ என எனக்குள் புரிந்துவிட்டதால் உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டே முதல் பானைக்கு அடிக்காமல் இருந்து விட்டேன்" என்றது.

அதுசரி! இந்த ஒப்பந்தக் கட்டுப்பாடு இரண்டாவது பானை எடுக்கும்போது உண்டு என்பதால் அடிக்காமல் இருந்தாயோ? என மணியை மடக்கினான் கண்ணன்.

"கண்ணா! அப்படியில்லை! உன் அழகே அழகு! கொள்ளை அழகு! அந்த அழகு சௌந்தர்ய ஒய்யாரத்தில் மயங்கியதால் என்னைப் பறிகொடுத்தேன்; ஆதலால் அடிக்க மறந்தேன்" என்றது மணி.

சாதுர்யமாகப் பேசும் மணியுடன் மீண்டும் தொடர்ந்த கண்ணன், "ஒப்பந்தக் கட்டுப்பாடும் என் அழகு சௌந்தர்யமும் மூன்றாவது பானை எடுக்கும் போதும் உள்ளவை தானே? ஏன் அடித்தாய்? என மாம்பழத்து வண்டாய்த் துளைத்துக் கேள்விமேல் கேள்வி கேட்டு மணியை அசத்தி விட்டான் கண்ணன்.

கோணலாக இருந்தாலும் கற்கண்டு இனிப்பதைப் போலத் தீரா விளையாட்டுப் பிள்ளையின் தந்திரத்தை உணர்ந்த மணி, "மணிவண்ணா! நீ தடுக்கில் நுழைந்தாய், நான் கோலத்தில் நுழைந்தேன்" என்றது. யாதும் தெரியாதவனைப் போலப் புரியவில்லையே எனக் குலாவினான் கண்ணன்.

"நாக்கிருந்தும் பேசத்தெரியாத நான் பூசையின் போது மட்டும் அடித்துப் பழக்கப்பட்ட என்னோடு ஒப்பந்தம் போட்டபோதே என்னை தெரிகிறதா? என உன்னை என்னிடம் காட்டாமல் காட்டிச் சோதித்ததால் உன் கபட நாடகத்தைப் புரிந்து கொண்டேன். நீ உறியில் உள்ள பொருள்களை நைவேத்தியமாக எடுத்து உண்ணவந்து விட்ட நிலையில் நான் உன் அருகிருந்து அடிக்காமல் இருந்துவிட்டால் பூசைக்கான பொலிவு இல்லாமல் போய் விடாதா? நைவேத்தியத்தின்போது மணி அடிப்பது தானே விசேடம்? எனவே நீ உரிமையோடு உறிப்பொருளை நைவேத்தியமாக எடுத்து உண்ணும்போது நான் அடிக்கவில்லையானால் பூஜைக்கான அர்த்தம் இல்லாமல் போவதோடன்றி நைவேத்திய நேரத்தில் அடிக்காத குற்றம் என்னைச் சார்ந்து விடாதோ? என்பதால்தான் நான் மூன்றாவது பானைக்கு அடித்துவிட்டேன்," என்று பயமில்லாமல் சொன்னது மணி.

கூடாரை (பகைவன்) வெல்லும் கோவிந்தன், கூடினவரிடம் (நண்பர்களிடம்)



தோற்றுப்போவது இயல்பு என்பதால் மணிமணியான மணியின் பதிலில் மயங்கிப்போன கண்ணன் உரலில் கட்டுண்டு கிடப்பதையும் மறந்தான் என்பதில் வியப்பில்லை. உரசலுக்காக வந்த மணி உறவாகி விட்டதே என்ற ஏகாந்தத்தில் மிதந்தான்.

ஆமாம்! அவன் தாயின் குடலை விளக்கம் செய்ய அவளது குடலில் கட்டுண்டு கிடந்தவன் தானே! அந்த வாஞ்சையால் தாம்புக் கயிற்றால் உடலோடு உரலோடு கட்டுண்டு கிடந்த உறவைப் பெற்றதால் தாமோதரன் என்ற நாமம் பெற்றதும் அவனுக்கான சிறப்பு தானே!

இப்படியாக யசோதை, கண்ணன், மணி என்ற மூவரும் ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளாமலேயே அவரவரும் உள்ளக் களிப்பு அடைந்ததோடு ஒருவரை ஒருவர் நேசித்துக் கொண்ட அனுபவப் பரிமாணத்திற்கு எல்லையில்லாதபடி ஆகி விட்டது தான் இக்கற்பனையில் உள்ள பேருண்மையாகும்.

இக்கற்பனையில் நாம் அனுபவிப்பது, மணிவண்ணனின் மகத்துவத்தையா? அல்லது மணியின் மா தத்துவத்தையா? அல்லது பெறாத கண்ணனைக் குடல் விளக்கம் பெறப் பெற்றதாகக் கருதப்படும் யசோதையின் யதார்த்தத்தையா? அல்லது பல நேரங்களில் உலக்கையால் குத்து வாங்கியே பழக்கப்பட்ட உரல் பெற்ற கண்ணனின் உறவையா? அல்லது கண்ணனின் கைப்பட்ட கயிறாக இருந்த உறியடைந்த உன்னதத்தையா? என்பதான நினைப்புகளுள் ஒன்றைவிட்டு ஒன்றை அனுபவிக்க முடியாதென்பதால் தின்னும் வெற்றிலையும் பருகும் நீரும் கண்ணனே என்பதுபோல் எல்லாமாய் உள்ள கண்ணனை அனுபவித்த அனுபவத்திற்கு மேலானதொரு அனுபவம் உண்டோ?

எனவே உரலில் கட்டுண்ட கண்ணனின் வெளிவந்த (சௌலப்பிய) களிப்பு எல்லார் நெஞ்சையும் நெருடுவது தான் கிருஷ்ணானுபவ மணி ஓசை என்பதால் அந்த மணி ஓசையின் மகத்துவத்தால் மணிவண்ணன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான் என்பதே ஆழ்வாரின் கிருஷ்ணானுபவக் கற்பனை எனலாம்.

## எண்ணச்சிதறல்

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

திருக்கோயில் ஜூலை 2007 மாத இதழ் மிகவும் நேர்த்தியான முறையில் நல்ல உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டுள்ளது. நல்ல சிந்தனைகள், நீதிநெறி, உள்ளத்தை உருக்கும் கட்டுரைகள், படங்கள் வெளிவருகிறது. வைணவத்தின் விடிவெள்ளி திருமங்கையாழ்வார். கட்டுரை பாசுரங்களுடன் அவர் வரலாற்றைத் தெளிவுடன் எளிய மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் உள்ளது. அவர் பாசுரத்தில் நாயகனைப் பிரிந்த நாயகியாகப் பாவித்து வண்டை நோக்கி தூதுவிடும் பாடல் அற்புதம் மேலும், முனைவர் அ.அறிவொளி அவர்களின் திருத்தாண்டக அருளிப்பாடுகள். கட்டுரை சைவ உலகின் அப்பரின் அருளிப்பாடுகளின் ஆற்றல் சிறப்பித்துக் கூறுகிறது.

**- அ. ஜெகந்நாத ஓதுவார், கரூர்**

நோய் தீர்க்கும் மருத்துவமனைகள் ஆலயங்களுக்கு ஒப்பாகும் சில அபூர்வ அற்புத ஆலயங்கள் தீராநோய் தீர்க்கிற திருத்தலங்களாய் திகழ்கின்றன. அவ்வகையில் நரம்பு கோளாறு சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணியாய் பேரம்பாக்கம் சோளீஸ்வரர் ஆலயம் விளங்கி வருவதையும் அந்த ஆலயத்தின் மகத்துவங்களையும் விவரித்த கட்டுரை பிரமிப்பு கலந்த பரவசத்தில் ஆழ்த்தி விட்டது.

அருள்மிகு தென்முகக் கடவுளரைப் போற்றிடுகிற 108 போற்றிகள் பாடி குருவருள் பெற்றுத் திகழ உதவியுள்ளீர்கள். நன்றி

**- த. சத்தியநாராயணன், அயன்புரம்**


## திருக்கோயில்

### திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | ரூ. | 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. | 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. | 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. | 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. | 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்
விளம்பரக் கட்டணம் விபரம்

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) ரூ. 15,000/-
2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 10,000/-
3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ. 7,500/-
4. உட்புறம் முழுப்பக்கம் ரூ. 5,000/-
5. உட்புறம் அரைப்பக்கம் ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034,
என்ற முகவரிக்கு அனுப்பவும்



**டாக்டர் திருமதி. இராதா தியாகராசன், எம்.ஏ., பி.எச்.டி.,**

# மாறிலா வள்ளி

முருகப் பெருமானின் அருகு நின்றருளும் அழகமர் மாதர் இருவருள் வள்ளி நாச்சியார் "மாறிலா வள்ளி" என்று சிறப்பிக்கப் பெறுகின்றார். தெய்வயானை நாச்சியார் "யானை தன் அணங்கு வாழ்க" என அடைமொழி ஒன்றால் வாழ்த்தப் பெறுகின்றார். வள்ளி நாச்சியார் "மாறிலா வள்ளி" என்று வாழ்த்தப்படுவதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும்.

சிவபரம் பொருளின் அருள்திரு வடிவமே அறுமுகக் கடவுள். சிவபெருமான் தன் ஐந்து முகங்களுடன் அதோமுகமும் (கீழ்நோக்கிய முகம்) கொண்டு அம்முகங்களின் நெற்றிக் கண்களிலிருந்து செலுத்திய தீப்பொறிகளே, அக்கினிக் கடவுளாலும் ஆகாய கங்கையாம் பாகிரதியாலும் தாங்கப் பட்டு, அவர்கள் தாங்க இயலாமையால் சரவணப் பொய்கையில் சேர்ந்து, "சரவண பவனாய்" ஆறு குழந்தைகளாய்த் தோற்றம் பெற்றன. ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஆறுமுகப் பெருமானாய்த் திருமேனி கொண்டன. இதனால் சிவபரம்பொருளே சோதியாய் எழுந்து, சரவணத்தில் குளிர்ந்து, "கருணை பொழி திருமுகங்கள் ஆறும்" கொண்ட முருகப் பெருமானாகத் திருமேனி கொண்டான் என்பது தெளிவு. அது பற்றியே "அறுமுகச் சிவனார்" என்றே அழைப்பர் ஆன்றோர்.

சிவபெருமான் தன்னிடமிருந்து என்றும் பிரியாத திருவருட் சக்தியாகிய பராசக்தியோடு-பாகம் பிரியாளோடு விளங்குவதே போல முருகப் பெருமான் இச்சா சக்தியாகிய வள்ளி நாச்சியாரோடும், கிரியா சக்தியாகிய தெய்வானை நாச்சியாரோடும், ஞானசக்தியாகிய வேலோடும் விளங்குகின்றான். இது பற்றி "வள்ளி தெய்வயானை மணவாளனே" என்றும் "வேலவன்" என்றும் வழங்கப் பெறுகின்றான்.

பரம்பொருளாய், தன் சொரூப நிலையில் தொழிற்படாமல் அசைவற்றிருக்கும் செம்பொருட்சிவம், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்வதற்காக அருள் திருமேனி கொள்கின்றது. பரமசிவமாகவுள்ள நிலையில் அவனுடன் பிரிவில்லாமல் விளங்கும் திருவருட் சக்தி பராசக்தி எனப்படுவாள். பரமசிவமே தொழிற்படுவதற்காக முருகத் திருமேனி கொண்ட பொழுது அத்திருவருட் சக்தியே தொழிற்பாட்டுக்கு உதவும் பொருட்டு மூன்று சக்திகளாகப் பிரிந்து, இரண்டு மாதரும் ஞான வேலுமாகிய வடிவம் கொண்டு அவனுடன் பிரிவில்லாமல் நின்று விளங்குகின்றனர்.

ஒருவன் ஒரு செயலைச் செய்வதென்றால் அவனுக்கு வேண்டியவை மூன்று. ஒன்று, அதைச் செய்வதற்கு வேண்டும் அறிவு; ஒன்று, செய்து முடிக்கும் திறன்; மற்றொன்று. இவ்விரண்டினும் இன்றியமையாதது. அதுவே, செய்ய வேண்டும் என்ற இச்சை. இச்சை இன்றி அறிவும், செய்யும் திறனும் இருந்தும் பயனில்லை. இச்சை மனிதனின் உள்ளத்தோடு இயைந்தது. மற்றை இரண்டும் அவன் பயன்படுத்தும் சாதனங்களே. இவற்றை, முறையே ஞானசக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி என்பர். இவை மனிதனிடத்தில் உள்ளது போல் இறைவனிடமும் உண்டு.

உயிர்கள், அறியாமையை விளைவிக்கும் ஆணவ மலத்தால் பிணிக்கப்பட்டிருத்தலின், அது நீங்கப் பெற்று உய்தியடைய வேண்டும்.

அவ்வுயிர்கள் பிறந்து இன்ப துன்பங்களில் உழன்று அறிவிலும் அன்பிலும் படுத்து உய்வடையும் பொருட்டு இறைவன் உலகைப் படைக்கின்றான் என்பது சைவக் கொள்கை. ஆணவ மலத்தின் செயலால் அறிவு மறைக்கப் பட்டுக் கிடக்கும் உயிர்கள், அறிவு விளங்கப் பெறுவதற்காகவே அவற்றின் மீது கருணை கொண்டு, உலகைப் படைக்க வேண்டும் என்று இச்சை கொள்கின்றான் சிவபரம்பொருள். அந்நிலையிலேயே அவனது இயற்கைச் சக்தி இச்சா சக்தியாக அவன் திருவுள்ளத்தில் தொழிற்படுகின்றது. படைத்தல், காத்தல், முதலிய ஐந்தொழில்களைச் செய்ய வைக்கின்றது. அவனது மாறிலப் பெருங் கருணை வெள்ளம் மாறில்லாமல் உயிர்களை வந்தடையச் செய்கின்றன.

ஆகவே, இச்சா சக்தி இல்லையேல், இறைவனின் திருவருட் பெருங்கருணை செயல்படாமல் நிற்கும். அவனது திருவுள்ளத்தின் வண்ணம் இச்சா சக்தி மாறில்லாமல் இயங்கினால்தான் அவனது பெருங்கருணை உயிர்களுக்குக் கிடைக்கும்.



முருகப் பெருமானது அளவிலாப் பெருங்கருணை நம்மை வந்தடையச் செய்பவர் இச்சா சக்தியாகிய வள்ளி நாச்சியாரே யாவார். முருகப் பெருமான் தன் அருளால் எவையும் வழங்கும் வள்ளல் என்றால், அவ்வருட் கருணையைத் தொழிற்படுத்தி, நம்மிடம் சேர்ப்பவராகிய இச்சா சக்தி வள்ளி ஆகின்றாள். வள்ளலின் பெண்பால் வள்ளி. வள்ளிக் கொடியின் இடையில் கண்டெடுக்கப் பெற்றாள் என்பதனோடு இக்காரணமும் வள்ளி என்ற பெயருக்கும் பொருந்துகின்றது.

பண்டைக்கால முதல் நம் தமிழ்நாட்டில் முருகனை வழிபடுவதற்கு ஆடல் பாடல்களும் வழிபாட்டு முறையாக இருந்து வருகின்றன. சங்க காலத்தில் முருகன், "முருகொத்தீயே முன்னியது முடித்தலின்" என்றவாறு வீரத்திற்குரிய கடவுளாகப் போற்றப் பெற்றான். போர்க்களத்துப் பாசறையில் வீரர் குழுவினர் முருகப் பெருமானை வழிபடு முகமாக ஆடல் நிகழ்த்துவர். பெண்ணொருத்தி வள்ளி நாயகி போல் வேடம் புனைந்து ஆடுவாள். அதைக் கண்டு மகிழ்ந்து, முருகப் பெருமான் அருள் வழங்குவான். இது சங்க இலக்கியம் தரும் செய்தி. இந்த ஆடலுக்கு "வள்ளிக் கூத்து" எனப் பெயர் வழங்கிற்று. இச்செய்தி வள்ளிபோலக் கோலம் புனைந்து ஆடுதலை முருகன் மிகவும் விரும்பினான் என்பதை காட்டும். ஏனெனில் போக சக்தியாகிய இச்சா சக்தியாதலின் வள்ளி நாச்சியாரிடம் அவனுக்குக் காதல் மிகுதி. இக்காதல் மிகுதியைக் கந்த புராணம் எடுத்துப் பேசும்.

திருமாலின் மகளாகிய சுந்தரவல்லி முருகப்பெருமானை மணவாளனாக அடையத் தவமிருந்தாள். அதன் பயனாக சிவமுனி என்பாரின் காதல் பார்வை, ஒரு மானின் மீது பட, அம்மான்

கருத்தரித்து ஒரு மானிடக் குழந்தையைப் (வள்ளியைப்) பெற்றது. வள்ளிக் கொடி யிடையில் அக்குழந்தையைக் கண்டெடுத்த வேடர் மன்னன் நம்பிராசன், தன் மகளாக வளர்த்தான். அவள் மங்கைப் பருவம் அடைந்து, குலவழக்கப்படி தோழியரோடு தினைப்புனம் காக்கச் சென்றாள். நாரத முனிவர் அங்கு அவள் இருத்தலையறிந்து, தணிகை மலையில் வீற்றிருந்த முருகனுக்கு அறிவித்தார். அவள் தன்னை அடையத் தவமிருந்தவளாதலின் அவனுக்கு அத்தவப் பயனை அளித்து ஏற்றுக் கொள்ளக் கருதிய முருகப் பெருமான், மண்ணுலகில் மங்கையாய் பிறந்த அவளை மண்ணுலக மரபுப் படியே,- தமிழகத்துக் களவுநெறிக் காதல் மரபுப்படி மணந்து கொள்ளத் திருவுள்ளம் பற்றினான். அவளிடம் இச்சை மிகுந்து அவளைக் காண வள்ளி மலைக்கு வந்தவன் போல் திருவிளையாடல் நிகழ்த்தினான். மண் குணம் இன்றி எண் குணம் வாய்ந்த ஈசன், மண்ணுலகத்தாரை எளிவந்து ஆட்கொள்ளும் திறம் அன்றோ இது? மண்ணுலகத் தாருக்காக, அவர் தம் மரபுப் படியே வள்ளி நாச்சியாரை மணம் புணர முருகப் பெருமான் காட்டிய திருவிளையாட்டுத் தோற்றம் இது என்பார் கச்சியப்ப சிவாச்சாரியார். வானில் விளங்கும் திங்கள், குளத்தில் கலங்கிக் கிடக்கும் தண்ணீரில், காற்றால் அலையெழும் போது அதில் கலங்கி அலைபாயும் உருவமாய் தெரிவது போன்றது இவ்விளையாடல் என விளக்குகிறார்.

"உலைப்படு மெழுக தென்ன உருகியே
ஒருத்தி காதல்
வலைப்படுகின்றான் போல வருந்தியே
இரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கல்நீர்க்
குளத்தில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன்
ஆடல் எல்லாம்"

என்பது கந்தப் புராணப் பாடல்

முருகப் பெருமான் வேடன் வடிவங் கொண்டு வள்ளி எதிர்சென்று, காதல் மொழி பேசி, அவளது தந்தையும் பிறரும் வரவே வேங்கை மரமாகி நின்று, பின்னர்த் தோழியும் வள்ளியும் தனித்திருந்த பொழுது, மான் வரக் கண்டதுண்டோ என்று வினவி, தோழியிடம் தன் விருப்பத்தைக் கூறி அவள் துணையுடன் வள்ளி நாச்சியாரின் உள்ளத் திசைவு பெற்று, அவளுடன் களவு மணம் புணர்ந்த திருவிளையாடல் எல்லாம் தமிழ் அகப்பொருள் மரபுப்படியே நிகழ்ந்தன.

முருகப்பெருமான் தனது கருணை யெல்லாம் செயற்படுவதற்குச் சக்தியாக நின்று துணை புரியும் தகுதி வள்ளிக்கு இருக்கிறதா எனச் சோதித்து, அவளை "மாறிலா வள்ளி" என்று அறிந்து ஏற்றுக் கொண்ட திருவிளையாடலே இது. வள்ளி நாயகி தனது மாறிலாக் காதலின் ஆற்றலால் தெய்வ உலகத்திலிருந்து முருகனை ஈர்த்து மனிதனாகவே அவன் தன்னை நோக்கி வரச் செய்த பெருமைக்குரியவள் ஆவாள்.

முருகனுடன் மாறாக் காதலினால் மறுவின்றி இயைந்தமையால், அவன் திருவுள்ளத்திற்கு மாறான எண்ணமும் போக்கும் வள்ளியிடம் ஒரு போதும் தோன்றவில்லை. ஆதலின் அவனது திருவருட் கருணைக்கு இசைந்த இச்சா சக்தியாக அவள் இயங்கிக் கொண்டிருக்கின்றாள். அவன் அவளது உள்ளத்தில் வீற்றிருக்கின்றான். அவள் உணர்வால் அவனுடன் ஒன்றி நிற்கின்றாள். ஞான சக்தியை விட அவள் உயர்ந்தவள். ஞான சக்தியாகிய வேல் முருகனது கையில் இலங்குகின்றது. ஆணவ மல வடிவமாகிய சூரபன்மனையும் அவனது கூட்டத்தாரையும் அழித்தது அந்த ஞானவேல். ஆணவம் அழியவே உயிர்கள் தாம் இறைவனுக்கு அந்நியம் அல்லர், அவனை யன்றித் தமக்குச் சுதந்திரம் இல்லை என்று



உண்மையை மெய்யுணர்வால் அறிகின்றன. அவ்வளவே, ஆனால் அங்ஙனம் உணரப்பட்ட இறைவனிடம் பக்தி செலுத்த வேண்டுமே! அவனிடம் அயரா அன்பு வேண்டுமே! மெய் கண்ட தேவர்.

"தம் முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல்
செலுமே"

என்ற சிவஞான போத எட்டாஞ் சூத்திரத்தில் கூறினாலும் அதன் பின் ஆழ்ந்த அன்பும் இருந்தால்தான் இறைவன் திருவடியைச் சேர இயலும் என்பார், பதினோராம் சூத்திரத்தில்.

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்று முடிந்த முடிவாகக் கூறுவாராயினார்.

அவ்வயரா அன்பு வள்ளி நாச்சியாராகிய இச்சா சக்திக்கு இருக்கிறது. அவளே உயிர்களிடமும் நின்று தொழிற்பட்டு. அவற்றிற்கு இறைவனிடம் அயராத அன்பை உண்டாக்குகின்றாள். காரணம் என்ன? இறைவனின் திருவுள்ளம் உயிர்கள் யாவும் அன்பு நெறியில் நின்று தன்னை அடைய வேண்டுமென எண்ணுகின்றது. அந்தத் திருவருட் கருத்தை இச்சா சக்தியாகிய வள்ளி நாச்சியார் தன் காதல் காரணமாக நன்கு உணர்ந்திருக்கின்றாள். ஞான சக்தி அறிவாற்றலால் உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள வேற்றுமையை அவ்வுயிர்களின் அறிவிலிருந்து மாற்றுகின்றது. ஆனால் இச்சா சக்தியோ உயிர்களின் உள்ளத்தை அன்பு மயமாக்குவதால் வேற்றுமையே தோன்றாமல், அன்பால் இறைவனையும் அடியவனையும் ஒன்றாக்குகின்றது. இறைவனின் கருணையை அடியவனின் அன்போடு கலக்கச் செய்து, திருவருளால் வரும் பேரின்பத்தை அடியவன் அனுபவிக்குமாறு செய்கின்றது. அதுவே, முருகப் பெருமானின் திருவுள்ளக் கருத்துமாகும். ஆதலினால்தான் கச்சியப்ப சிவாச்சாரியார்,

"ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க
வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க
செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு
வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா
ரெல்லாம்"

என்ற பாடலில் "மாறிலா வள்ளி" எனச் சிறப்பித்தார். அவள் முருகனின் திருவுள்ளத்திற்கு மாறின்றி இயங்குவதால் அடியார்கள் அப்பெருமானிடம் பேரன்பு கொண்டு அவ்வன்பில் முருகி நின்று, அதன் விளைவாக திருவருள் வியாபகத்தில் ஒடுங்கிப் பேரானந்தப் பெருவாழ்வில் வாழ்வர். ஆதலின் "மாறிலா வள்ளி வாழ்க! வாழ்க சீரடியா ரெல்லாம்" என்று ஒருங்குற வாழ்த்துகின்றார். சீர் என்பது வீடு பேறு. அடியார் எல்லாம் மாறிலா வள்ளியின் அருளால் சீருடன் வாழ்க என்று இதற்குப் பொருள் கண்டு மகிழ வேண்டும்.

# திருப்பாணாழ்வார்

ஆன்மீக எழுத்தாளர் திரு. எ. கிருஷ்ணன்

எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணன் உண்மையான பக்தியை பரப்புவதற்கும் உலக நன்மைக்காகவும் தெய்வீக அம்சம் கொண்ட பல பக்தர்களை படைத்துள்ளார். அவர்களில் வைணவத்தில் ஆழ்வார்களும், சைவத்தில் நாயன்மார்களும் ஆகும்.

பன்னிரு ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார் சோழநாட்டில் ஸ்ரீரங்கத்தில் காவிரிக் கரையில் உள்ள உறையூரில் கார்த்திகை மாதம் பூர்துர்மதி வருஷம், ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீவத்சத்தின் அம்சமாக 5-வது வருணத்தில் பாணர்சேரி ஒன்றில் நெற்கதிரின் அருகே அவதரித்தார்.

எம்பெருமாளின் அருளால் அவர் கருவிலேயே திருஉடையவராக அரங்கனிடத்தே ஆறாத பக்தி கொண்டார். ஸ்ரீரங்கத்தில் உள்ள பாணர்சேரியில் வாழ்பவர்கள் அனைவரும் இசைக்கலையில் சிறந்து விளங்கினார்கள். சாதாரண மனிதர்கள் கூட அவ்விசைக்கு ஆட்படாமல் இருக்க முடியாது. அத்தகைய பாணர்சேரி மக்களை சாதியை காரணங்காட்டி ஒதுக்கி வைத்தார்கள். அதே பாணர்சேரியில் தான் எம்பெருமான் திருமாலின் திருவருளால் ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாக திருப்பாணாழ்வார் அவதாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பாணர் தினமும் காலையில் காவேரியில் நீராடி திருமண் அணிந்து துளசி மாலையை கழுத்தில் சூடிக்கொண்டு கையில் வீணையுடன் காவிரியாற்றின் தென்கரையில் இசைமூலம் வழிபட்டு அவன் திருவடிவத்தை அனுபவிப்பார்.

மேலும் தாம் தாழ்ந்த வருணத்தில் பிறந்ததால் உபயகாவேரி அருகே இருந்து அரங்கன் திருக்கோவில் அருகே வராமல் தூர நின்றபடியே வழிபட்டு வந்தார்.

ஒரு சமயம் திருப்பாணர் காவிரியின் தென்கரையில் இசைமூலம் அரங்கனின் துதிப் பாடலைப்பாடி தன்னை மறந்து வழிபட்டு வந்தபொழுது ஆலயத்தில் அரங்கநாதனுக்கு நீராட்டும் பணிபுரியும் உலோக சாரங்க முனிவர் காவிரியில் திருவரங்கனின் விக்கிரகத்திற்கு நீராட்டும் திருமஞ்சனத்திற்கு ஆற்று நன்னீர் எடுத்து போவதற்காக கையில் பொற்குடம் ஏந்தி அங்கே வந்தார். ஆற்றில் வழக்கமாக நீர் எடுக்கும் இடத்திற்கு அருகில் திருப்பாணர் நிற்பதைக் கண்டு பாணர் என்பதை அறிந்து அவரை தள்ளிப்போகச் சைகை செய்தார். பிறகு தம் கைகளை தட்டித் தள்ளி போகும்படி குறிப்பிட்டார். முனிவர் நீர் எடுக்கும் பொழுது பேசமாட்டார். திருப்பாணரோ அதை அறியவில்லை பரமபக்தியில் ஈடுபட்டு தன்னையே மறந்திருந்ததால் அவர் இதை காதில் வாங்காமல் நின்று விட்டார். கோபம் கொண்ட அந்தணர் ஒரு கல்லை பாணர் மீது வீசினார் அக்கல் பாணர் நெற்றியில்பட்டு இரத்தப் கொட்டியது அதன்பிறகே பாணர் தன் நிலையை அடைந்து முனிவர் நீர் எடுக்கும் வழியில் தாப் நிற்பதை கண்டு நடுங்கி அந்த இடத்தைவிட்டு நீங்கி சென்றார்.




பிறகு முனிவா நீரை எடுத்துக் கொண்டு அரங்கனுக்கு நீராட்டுவதற்கு அருகில் சென்றார் அப்பொழுது விக்கிரஹத்தின் நெற்றியிலிருந்து இரத்தப் பெருகி வழிந்து கொண்டிருந்தது பாணருக்கு கல்லடிப்பட்டது போல அதே அளவு ரத்தப் பெருமாளுக்கும் நெற்றியிலிருந்து ரத்தம் கொட்டியது. இதை கண்ட முனிவர் பதைபதைத்தார் மனம் கலங்க தடுமாறினார் உணவும் உறக்கமும் இல்லாமல்

மிகவும் வேதனை அடைந்தார்.

அப்பொழுது அவர் கனவிலே எம்பெருமான் தோன்றி என்மீது நீங்கா அன்பு கொண்ட பாணரை கல்லால் எறிந்து நெற்றியில் இரத்தம் வழியச் செய்தாய் அவன் காயத்தை நாமும் ஏற்றுக் கொண்டோம். ஆகையால்தான் நம் நெற்றியில் ரத்தம் கொட்டியது. நீ நாளை விடியற்காலை காவிரிகரைக்கு சென்று என்னை துதிபாடும் பாணரை உன்னுடைய தோளின் மீது ஏற்றிச் சுமந்து கொண்டு நம்மருகே வந்துவிடுக எனக் கூறி மறைந்தார். பிறகு உலோக முனிவரும் காவிரியின் தென்கரையை அடைந்தார். அரங்கனை வழக்கம் போல் துதித்து பாடிக் கொண்டிருந்த பாணரின் காலில் விழுந்து வணங்கி அந்தணர் செய்த தவறுக்கு வருத்தம் தெரிவித்தார். மேலும் எம்பெருமான் அருளியதை எடுத்து கூறினார். முனிவர்தம் திருவடிகளில் விழுந்து வணங்கியதைக் கண்டதும் பாணர் மனம் பதறினார். அடியேன் மிக தாழ்ந்த ஜன்மம் இப்படி செய்யலாமோ, பெரிய கோவில் வாசலையும் மிதிக்கத்தகாதவன் அன்றோ என்று கூறி வர மறுத்தார். ஆனால் முனிவரோ திருபாணர் பேச்சுக்கு இசையாது வலுக்கட்டாயமாக அவரை தூக்கி தம் தோளில் அமர்த்தி திருவரங்கன் திருக்கோயில் முற்றம் புகுந்தார். என்ன ஆச்சர்யம்! கோவில் வாசலில் புகும்பொழுதே திருவரங்கனும் பெரிய பிராட்டியும் சேர்ந்தபடி தம் திருக்கோலத்தை பாணர் திருக்கண்களால் பார்த்து குளிரும்படி காட்சி அளித்தார். பாதம் முதல் திருமுடிவரை கண்ணாற கண்டு மனம் மகிழ்ந்தார் பாணர். திருப்பாணர் அரங்கனை பற்றி பத்து பாசுரங்களை பாடியுள்ளார் என்பது விசேஷம். பாணரின் கடைசி பாசுரமாக.

**"அரங்கன் அமுதினைக் கண்ட கண்கள்"**
**மற்ற ஒன்றினைக் காணாவே"**

என்று பாடி முடிக்க திருபாணரை தம் அருகே அழைத்து கொண்டார் அரங்கன்.



## காலச்சுவடு

மதுரை
அருள்மிகு
மீனாட்சி சுந்தரேஸ்வரர்
திருக்கோயிலில்
அண்ணல் காந்தியடிகள்

# அருள்மிகு வடபழநி ஆண்டவர்



கலியுக வரதனாகிய கந்த பெருமான் உலகம் உய்யும் பொருட்டு, வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக் கொண்டும், அருள்பாலித்துக் கொண்டும் அருள்மிகு வடபழநி ஆண்டவராக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். இத்தலமானது சென்னை மாநகரின் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. இத்தலம் கிழக்கு மேற்காக ஆற்காடு சாலையும். தென்புறமுள்ள 100' சாலை ஆலந்தூரையும் வடபுறமுள்ள சாலை செங்குன்றத்தையும் இணைக்கிறது.


கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை நாட்டின் புலியூர் கோட்டம் எனும் இந்த திவ்ய திருத்தலத்தில் அண்ணாசாமி நாயகர் எனும் பெரியவர் முருகப் பெருமான் மீது மாசற்ற பக்தி கொண்டு தனக்கு உற்ற நோய் நீங்கப் பெற்று, தென் பழநியிலிருந்து, பழநி ஆண்டவரின் திரு உருவப்படம் பெற்று அப்படத்தினை தரிசித்து வந்தார். திருத்தணி மற்றும் திருப்போரூர் போன்ற முருகன் குடி கொண்ட தலங்களுக்கு அடிக்கடி சென்று தரிசித்து வரும் அவரது கனவில் ஒரு நாள் 'முருகன்' தோன்றி 'தாங்கள் வசிக்கும் இடத்திலேயே நாம் குடிகொண்டுள்ளோம் என கூறக்கேட்ட பின்னர் தாமிருக்கும் இல்லத்தையே கோயிலாக அமைத்து பழநி ஆண்டவரின் படத்தை வைத்து பூசை செய்து வந்துள்ளார்.

## தலச்சிறப்பு

பக்தர்கள் துயர் துடைக்க அடிக்கடி குறி சொல்லியும், தனது நாக்கினை அறுத்து இறைவனுக்கு காணிக்கையாக செலுத்தி, பின்னர் நாக்கு நன்கு வளர்ந்த பின்னர் இவர் கூறும் குறி பலிக்கும் வகையில் பெருந்திரளாக மக்களை ஈர்க்கும்படி இருந்துள்ளது. இக்காணிக்கையினை 'பாவாடம் தரித்தல்' எனவும் மக்கள் கூறி வந்துள்ளார்கள். இவ்வாறு இறை பணி செய்து வந்தவருக்கு மூப்பு எய்திய பின்னர் இவரது சீடர்களில் ஒருவரான ஸ்ரீரத்தினசாமி தம்பிரான் என்பவரை இவரது பணியினை தொடர்ந்து செய்ய வேண்டி பணித்து பின்னர் முக்தியடைந்தார்.

ஸ்ரீரத்தினசாமி தம்பிரானும் அருள்மிகு வடபழநி ஆண்டவருக்கு உருவச்சிலை அமைத்து பூசைகள் செய்தும், நாடி வரும் பக்தர்களுக்கு குறி சொல்லியும், தமிழ்நாட்டின் வடபகுதியில் அமைந்திருப்பதால், இத்தலத்தினை 'வடபழநி' எனவும் வழங்க, வரும் பக்தர்களிடம் கூறி வந்துள்ளார். பின்னர் இவரது வழித்தோன்றலாக வந்தவர் தான் ஸ்ரீ பாக்கியலிங்க தம்பிரான். இவரும் முருகன்பால் பேரன்பு கொண்டு வரும் பக்தர்களுக்கு அருளாசிகள் வழங்கியும், சில நாட்களில் குறி சொல்லியும் மக்களின் கவனத்தை மிகவும் கவர்ந்து வந்துள்ளார். மூன்றாவது சாதுவான இவர் 1931-ம் ஆண்டு முக்தியடைந்தார். பின்னர் இம் மூவரின் புகழும் தமிழ்நாடெங்கும் பரவி புகழோங்கி விளங்குகிறது.

ஒரு தலத்தின் சிறப்பு, திருக்கோயிலாலும், மூர்த்திகளாலும், தீர்த்தங்களினாலாகும். இத்தலம் மூலவர் அருள்மிகு வடபழநி ஆண்டவரின் மூலம் சிறப்பு பெற்றுள்ளதாகும். நினைத்தது நடக்க வடபழநி ஆண்டவரை வழிபடும் பக்தர்களின் வேண்டுதலை விரைந்து தீர்த்து வைக்கின்ற காரணத்தினால், பிரார்த்தனை செய்து கொள்ளும் பக்தர்கள், காணிக்கையாக தலைமுடி செலுத்துதலும், வேல், ரொக்கம், போன்றவை உண்டியலில் செலுத்துதலும், பால்காவடி,





புஷ்பகாவடி எடுத்தலும் தனி சிறப்பாகும்.

பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்களின் நன்கொடையினைக் கொண்டே, தெற்கு ராஜகோபுரம் 72' உயரத்தில் கட்டி முடித்து 1972-ல் முதல் முறையாக மகாகும்பாபிஷேகம் சிறப்புடன் நடந்தேறியது. 1984-ல் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு கோபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு 2-வது முறையாக கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1984-ல் புதியதாக தங்கரதம் ஒன்று அமைத்து பக்தர்களின் பிரார்த்தனைக்காக பயன்பாட்டில் உள்ளது. உட்புறம் அனைத்து இடங்களிலும் கருங்கல் தளவரிசை, பளிங்கு கற்கள் பிரகாரங்களில் பதித்து, கடப்பைக் கற்கள் பதித்து 3-வது முறையாக 1996-ல் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கொடி மரத்திற்கும், தெற்கு மற்றும் கிழக்கு கோபுர கலசங்களுக்கும் தங்கரேக் பதிக்கும் வேலையும், தங்கத்தால் ஆன பொன்னூஞ்சல் அமைக்கும் பணிகளும் உள்ளடக்கிய திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் மாத இறுதியில் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள குடமுழுக்கு விழாவில் அனைவரும் கலந்து கொண்டு வடபழனி ஆண்டவரின் அருள் பெற திருக்கோயில் சார்பாக அன்புடன் அழைக்கின்றோம்.

- அ.தி. பரஞ்ஜோதி, எம்.காம்., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

## நூல் மதிப்புரை




லட்சம் பிரதிகளைக் கடந்துள்ள லட்சிய பத்திரிக்கையான ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சிறப்பிதழ் வெளியீட்டு விழா 22.07.07 அன்று நடைபெற்றது.

சிறப்பிதழினை விழாத் தலைவர் சுவாமி கௌதமானந்தர் வெளியிட பிரதியினை அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் அருட்செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், ஹைதராபாத் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ஞானதானந்தர், முன்னாள் விஜயம் ஆசிரியர் சுவாமி கமலாத்மானந்தர், டாக்டர் நல்லி. என். குப்புசாமி செட்டியார், தமிழருளி மணியன், தென்கச்சி சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.




பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளிய அருள் வெள்ளத்தினை உலகெங்கும் சுவாமி விவேகானந்தர் அள்ளித் தெளிக்கும் அட்டையைக் கொண்ட இந்த சிறப்பிதழ் 130 பக்கங்களுடன் வண்ண ஆர்ட் தாளில் அச்சிடப்பட்டு துறவிகள் மற்றும் அறிஞர்களின் 55 கட்டுரைகளுடன் மிக அருமையாக வெளிவந்துள்ளது. நூலின் விலை ரூ. 8 மட்டுமே. நூல் கிடைக்குமிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம், மைலாப்பூர், சென்னை - 4. மடத்தின் வலைதள முகவரி www.sriramakrishnamath.org வழியாகவும் பெறலாம்.

# அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில்

## ஒப்பிலியப்பன்கோயில்

வெப்சைட் : www.oppiliappantemple.org
ஈ மெயில் : uppiliappan koil@sancharnet.in

தென் திருப்பதி, பூலோக வைகுந்தம், திருவிண்ணகர், துளவீனம், மார்க்கண்டேய க்ஷேத்திரம் என்றெல்லாம் போற்றப்படும் ஒப்பிலியப்பன் கோயில் அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகருக்குத் தெற்கில் 7 கி.மீ. தூரத்தில் காரைக்கால் செல்லும் சாலையிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**தலவரலாறு :**

வேங்கடாசலபதி, ஒப்பிலியப்பன், ஸ்ரீநிவாஸன், திருவிண்ணகரப்பன் என்று திருநாமங்கள். திருப்பதிக்கு முன்பே பெருமாள் இவ்வூருக்கு எழுந்தருளியதாக சம்பிரதாயம். அதனால் திருப்பதிப் பெருமாளுக்கு அண்ணார் என்று உலக வழக்கில் ரசமாகச் சொல்லப்படுகிறது. திருப்பதிப் பிரார்த்தனைகளை எல்லாம் இத்திருத்தலத்தில் பெருமாள் ஏற்றுக் கொள்கின்றார். இந்தப் பெருமாளை நம்மாழ்வார். திருமங்கையாழ்வார். பொய்கையாழ்வார். பேயாழ்வார் என்ற நான்கு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமான் திருவிண்ணகரப்பனாக நின்றதிருக் கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சியளித்து, வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அளிக்கும் அனுக்கிரஹமூர்த்தியாக விளங்குகிறார். திருமுடியில் நவரத்தின மகாகிரீடம், கருணை பொழியும் திருக்கண்கள், புன்னகையுடன் கூடிய திருமுக மண்டலம், இரு கைகளில் சங்கம், சக்கரம், மகர குண்டலங்கள், ஒளிவீசும் திருக்காதுகள், அகன்ற திருமார்பில் மகாலட்சுமி, இடுப்பிலே தசாவதார ஒட்டியாணம், அஷ்டாக்ஷர மணிமாலை, ராம பட்டாபிஷேக மாலை, சகஸ்ரநாம மாலைகள் இவற்றுடன் காட்சியளிக்கிறார்.



பெருமாள் வலக்கை தானஹஸ்தம். அதில் "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கின்ற கீதா வாக்கியம் எழுதப்பட்டுள்ள பதக்கம் அழகாக விளங்குகின்றது. இதன் பொருள் "என் ஒருவனையே சரணமாக அடை" என்பதாகும்.

பெருமாளுக்கு வலப்புறத்தில் கை கூப்பிய வண்ணம் ஸ்ரீபூமிதேவி நாச்சியார் அமர்ந்து காட்சியளிக்கிறார். இவர் மார்க்கண்டேய மகரிஷியின் தவப்புதல்வி ஆவார்.



மார்க்கண்டேயர் இடப்புறத்தில் அமர்ந்து உள்ளார். மார்க்கண்டேய மகரிஷி மகாவிஷ்ணுவைக் குறித்துக்கடுந்தவம் புரிந்தார். தவத்தின் பயனாய் மகாலட்சுமியே சிறு குழந்தை வடிவாகத் துளசிச் செடியின் கீழ் அவதாரம் செய்தார். பூமியில் இருந்து பெண் குழந்தை கிடைத்ததால் பூமிதேவி என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தார் அச்சமயத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள எம்பெருமான் ஸ்ரீ பூமிதேவியை மணம் செய்ய விரும்பிப் பங்குனி மாதம் ஏகாதசி நன்னாளில் மார்க்கண்டேய மகரிஷியின் குடிலுக்கு விஜயம் செய்தார். மார்க்கண்டேயரைப் பரிசோதிக்க விரும்பிப் பெருமாள் வயோதிக ரூபம் கொண்டு வந்தார். வந்த வயோதிகர் மகாவிஷ்ணு என்று அறியாமலேயே மார்க்கண்டேயர் அவரை வரவேற்று உபசரித்தார்.

வயோதிகராக வந்த மஹாவிஷ்ணு மார்க்கண்டேயரிடம் "இங்கு திருமணம் செய்வதற்குக் கன்னிகை இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் திருமணம் ஆகாத பிரம்மசாரி. எனக்குத் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால் நான் இல்லற தர்மம் நடத்த உதவியாக இருக்கும்" என்று கூறினார். அதற்கு மார்க்கண்டேயர் "என் பெண்ணோ சிறிய குழந்தை. இன்னும் உப்புச் சேர்த்துக் கூட சமையல் செய்யத் தெரியாத வயது. அதனால் வயோதிகராகிய தங்களுக்கு எப்படி அவளைத் திருமணம் செய்து கொடுக்க இயலும்?" என்று கூறி மறுத்தார். வயோதிகராக வந்த மகாவிஷ்ணு "தங்கள் பெண் உப்பில்லாமல் அமுது செய்வித்தாலும் அதை நான் அமிர்தமாக ஏற்றுக் கொள்வேன். எனக்குத் தாங்கள் பெண்ணைக் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்காவிடில் நான் உயிரையே விட்டுவிடுவேன்" என்றார்.

மார்க்கண்டேயர் நாராயணனை நினைத்துப் பிரார்த்தித்தார். நெடுநேரம் கழித்துக் கண்ணைத் திறந்து பார்த்தார். ஆஜானுபாகுவாய் ஸர்வாபரண பூஷிதராய்ப் புன்னகையுடன் காட்சி தந்தார் மகாவிஷ்ணு.

மார்க்கண்டேயரும் பெருமாளை வணங்கிச் சேவித்து உபசாரம் செய்து "என் மகளைத் தங்களுக்குத் திருமணம் செய்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி. ஆனால் எனக்கு மூன்று வரம் தர வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

1. என் பெண் பூமிதேவியை மணந்து இத்தலத்திலேயே எந்நாளும் நீ வசிக்க வேண்டும்.

2. உப்பின் சம்பந்தமில்லாமல் நீ அமுது செய்யும் உணவு உன் அடியார்களுக்கு மிகுந்த சுவை உடையதாய் இருக்க வேண்டும்.

3. அடியார்களுக்கு எல்லா நன்மைகளையும் அளிக்கும் இந்தத் தலம் என் பெயரால் மார்க்கண்டேய க்ஷேத்திரம் என்று விளங்க வேண்டும். கடைசியில் எனக்கு மோக்ஷத்தையும் தந்தருள வேண்டும் என்றார்.

பெருமாளும் மகிழ்ந்து அப்படியே வரம் அளித்தார்.

பெருமாள் இந்த ஊரில் அவதாரம் செய்தது பங்குனி மாதம் சிரவண நட்சத்திரம். பூமிதேவி நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டது ஐப்பசி மாதம் சிரவண நட்சத்திரத்தன்று ஆகும்.

**சிரவண விரதம் :**

ஒவ்வொரு மாதமும் சிரவண நட்சத்திரத்தன்று பகல் 11 மணியளவில்

மூவகை தீபம் ஏந்தி, சுவாமிகள் இத்திருக்கோயிலில் வலம் வருவார்கள். இந்நிகழ்ச்சி "சிரவண தீபம்" என்று உலகப்புகழ் பெற்றது. அந்நாளில் பல்லாயிரக்கணக்கில் சேவார்த்திகள் வருகைதந்து உண்ணாநோன்பு இருந்து உப்பில்லாத உணவைப் பெருமாளுக்கு நிவேதனம் செய்து உண்டு சிரவண விரதம் முடிப்பர்.

**"என்னப்பன் எனக்காயிருளாய் என்னைப் பெற்றவளாய்ப்**
**பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன் என்ன பனுமாய்**
**மின்னப்பொன்மதில் சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்து அப்பன்**
**தன்னனொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே"**

இந்த நம்மாழ்வாரின் பாசுரத்தில் "தன்னொப்பாரில்லப்பன்" என்று பாடுவதால் இப்பெருமாளுக்கு நிகரான தெய்வம் வேறு இல்லை என்று ஆழ்வார் கூறுகிறார். அதனால் இத்தலத்துப் பெருமாளுக்கு "ஒப்பிலியப்பன்" என்று திருநாமம் ஏற்பட்டது.

இத்தலத் திருக்குளத்தின் பெயர் "அஹோராத்ர புஷ்கரிணி" (பகல் இராப் பொய்கை). எந்த நேரத்தில் இங்கு நீராடினாலும் புண்ணியம் உண்டு.

எம்பெருமாள் நித்தியவாசம் செய்யும் கர்ப்பகிருகத்தின் மேல் உள்ள விமானத்தின் பெயர் சுத்தானந்த விமானம் (தூய இன்ப விமானம்) ஆகும்.

இத்தலப் பெருமாளைச் சேவிப்பதால் இம்மைக்கு வேண்டிய எல்லா நலன்களும் கிடைக்கும். திருமணத்தடை நீங்கி நல்ல இடத்தில் விவாஹம் நடைபெறும். நன்மக்கட் பேறு, குறையாத செல்வம், நிலையான புகழ், ஆயுள், ஆரோக்கியம் முதலிய எல்லா நலன்களையும் தந்தருளும் பெருமாள் இவராவார்.

### பிரார்த்தனை உற்சவங்கள் :

தமக்கு இறைவன் தந்ததில் ஒரு பகுதியை அவனுக்கே அர்ப்பணித்துப் புளகாங்கிதம் கொள்ளும் பக்தர்கள் எத்தனை! எத்தனை! பல வகையான வேண்டுதல்களை நிறைவேற்றுவதால் பெருமாளுக்குப் பலவகையான பிரார்த்தனை உற்சவங்கள் நிகழ்கின்றன.

| உற்சவங்கள் | நேரம் | கட்டணம் |
|---|---|---|
| உற்சவர் திருமஞ்சனம் | காலை 9.30 | ரூ.600.00 |
| மூலவர் திருமஞ்சனம் | காலை 11.00 | ரூ.3600.00 |
| திருக்கல்யாணம் | மாலை 3.30 மணி | ரூ.1050.00 |
| கருடசேவை | மாலை 5.30 மணி | ரூ.350.00 |
| தங்கரத உலா | இரவு 6.30 மணி | ரூ.1000.00 |
| ஊஞ்சல் உற்சவம் | இரவு 7.00 மணி | ரூ.200.00 |
| கண்ணாடிப் பள்ளியறை | இரவு 7.15 மணி | ரூ.300.00 |

### பிரார்த்தனைத் தங்க ரத உலா :

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக வைணவத் தலமொன்றில் தங்கரதம் அமைக்கப்பட்டுள்ளது இத்தலத்தில் மட்டுமே. பக்தர்கள் பிரார்த்தனைக்காகப்





பெருமாளையும் பூமிதேவியையும் தங்கரதத்தில் எழுந்தருளச் செய்து வெளிப்பிரகாரத்தில் உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**பிரார்த்தனைத் துலாபாரம் :**

தமிழக வைணவத் தலங்களில் முதலாவதாகத் துலாபாரம் நிறுவப்பட்டதும் இத்தலத்தில்தான். அன்பர்கள் தமது எடைக்குச் சமமாய்த் தம்மால் இயன்றதைத் தந்திடும் வகையில் உப்பு தவிர அனைத்துப் பொருட்களும் காணிக்கையாகப் பெறப்படுகின்றன. திருக்கோயிலிலேயே நடப்பு சந்தை விலைக்குப் பொருட்களைப் பெற்று கொள்ளலாம்.


இத்திருத்தலத்தில் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விரும்பும் நாள்களில் அர்ச்சனைகள் செய்து பிரசாதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

**தங்கும் விடுதிகள் :**

இத்திருக்கோயிலில் சேவார்த்திகள் தங்குவதற்குத் தங்கும் விடுதிகள் உள்ளன.

அர்ச்சனைகள் செய்ய, பிரார்த்தனை உற்சவங்கள் செய்ய, தங்குமிடம் பதிவு செய்ய, மேலும் விவரங்கள் அறிய, வரைவோலை, மணி ஆர்டர் முதலானவை அனுப்ப உதவி ஆணையர் செயல் அலுவலர், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், திருநாகேசுவரம் (அஞ்சல்), கும்பகோணம் (வட்டம்), தஞ்சாவூர் (மாவட்டம்), பின்கோடு - 612 204.
தெ.பே எண் : 0435 - 2463385, 2463685 என்ற முகவரிக்கு அஞ்சலிலோ, தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

**ஸ்ரீய : காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம்**



## ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த

# அணைகட்டாப்புத்தூர் சிவன்!



இறைவன் வெளிப்பட விரும்பும் நேரம் வரும்போது, அவரின் புகழும் பெருமையும் வெளிப்படும் என்பதற்கு சிறந்த உதாரணமாக திகழ்கிறது அணைக்கட்டாபுத்தூர் சிவன் கோவில்.

சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவாலயமும், அதன் அருகில் நந்தி தேவரின் அருள்பெற்ற சித்தரின் ஜீவ சமாதி இருப்பதும் அண்மையில்தான் தெரியவந்துள்ளது.

இச்சிறப்புமிகு பழம்பெரும் சிவாலயம் வேலூர் மாவட்ட எல்லை கிராமமான அணைக்கட்டாப்புத்தூர் என்ற சிற்றூரில் அமைந்துள்ளது. இவ்வூர் அருகில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேரம்பாக்கம் என்ற ஊர் அமைந்துள்ளது.

### தொன்மை சிறப்பு

இவ்வூரின் தொன்மை சிறப்பு இந்திய தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதன் மூலம் இவ்வூர் "அணை அக்கரைப்புதூர்" என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்டதை அறியமுடிகிறது. "அணை அக்கரைப்புதூர்" என்ற பெயர் நாளடைவில் மருவி "அணைக்கட்டா புத்தூர்" என்று தற்போது அழைக்கப்படுகிறது.


இக்கோயில் பார்த்திவேந்திர சோழ மன்னனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் சிறப்பு பெற்று விளங்கியதை (கி.பி 965) கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

இரண்டாம் ஆதித்ய கரிகால் சோழனின் ஆட்சிக் காலத்தில் இச்சிவாலயம் சீருடனும், சிறப்புடனும் விளங்கியதையும் அறிய முடிகிறது. இம்மன்னனே சுந்தர சோழனின் புதல்வன் என்பதும், ராஜராஜசோழனின் தம்பி என்பதும் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து

சின்றிமாவன், செருப்போசன் எழுவன் மற்றும் அவனது சகோதரனும், விளைநிலம் மற்றும் வீட்டுமனைகளை இவ்வாலயத்திற்காக தானம் வழங்கிய செய்தியும் தெரியவருகிறது. இந்த தானம் இறைவனுக்கு அர்ச்சனை, ஆராதனை செய்யும் பணிக்காக வழங்கப்பட்டதாகும்.

### ஆலய அமைப்பு

ஆலயம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ராஜகோபுரம் இல்லை. உள்ளே நுழைந்ததும் பலிபீடமும், நந்தியும் இறைவனை நோக்கி அமைந்துள்ளன. கொடி மரம் இல்லை. இடது புறம் சென்றால் அன்னை காமாட்சி சந்நிதி உள்ளது. கிழக்கு நோக்கிய அம்மன் எளிய வடிவில் அழகுற காட்சி தருகின்றாள். அதனையடுத்து, சுவாமி சந்நிதியை அடைகிறோம். இறைவன் எழிலான உருவத்தில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். இவரின் மன்னர்காலப்பெயர் "ஆதித்ய மகாதேவர்" என்பது. இன்று



இவரின் பெயர் "ஏகாம்பரேஸ்வரர்" ஆகும்.

சுவாமி சந்நிதியின் சுற்றுச்சுவரில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் அமைந்துள்ளன. ஆலயத்தின் வடகிழக்கு பகுதியில் நடராஜர் சந்நிதி அமைந்துள்ளது. ஈசானிய மூலையில் நவக்கிரக சந்நிதி அமைந்துள்ளது.

## பெருமாள் சந்நிதி

இவ்வாலயத்தின் வடமேற்கில் பெருமாள் சந்நிதி அமைந்துள்ளது. ஸ்ரீதேவி, பூதேவியுடன் கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் காட்சி தருகிறார். இச்சிலைகள் மன்னர்கால சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. மூலவர் சிற்பங்கள் மூன்றும் வெகு நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது. மேலும் சிவாலயத்தில் வைணவ சந்நிதி அமைந்துள்ளது அக்காலத்திலேயே இவ்வாலயம் சைவ-வைணவ ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்ததை குறிப்பிட்டாக வேண்டும். கல்யாண திருக்கோலத்தில் பெருமாள் காட்சி தருவதால், திருமண வரம் தரும் கண்கண்ட தெய்வமாக இவர் விளங்குகின்றார்.

## நந்தி சித்தர் ஜீவ சமாதி

இக்கோயிலின் நந்தி மண்டபத்தின் இடது புறத்தில் நாகலிங்க சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. இதுவே நந்தி சித்தரின் ஜீவசமாதி என்பது தற்போது ஒரு சிவனடியாரின் மூலம் வெளி உலகிற்கு தெரியவந்துள்ளது.

இவர் நந்திதேவரிடம் தோன்றிய முதன்மை சீடர் எனக் கூறப்படுகிறது. இவரை வழிபட்டால் தீராத நோய்கள், திருமணத் தடை, கடன்சுமை, புத்திர தோஷம், குடும்பப் பிரச்சினை, தீராத வழக்குகள் என அனைத்தும் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

## கோவில் அமைவிடம்

இப்பழமை வாய்ந்த சிவாலயம், வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூருக்குச் செல்ல சென்னைக்கு மேற்கே 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேரம்பாக்கம் என்ற ஊருக்கு வர வேண்டும். பின்னர் அங்கிருந்து மேற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அணைக்கட்டாப்புத்தூர் செல்லலாம். ஆட்டோ வசதி உள்ளது. பேரம்பாக்கத்திற்கு சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்தும், பூந்தமல்லி பேருந்து நிலையத்திலிருந்தும் ஏராளமான பேருந்துகள் உண்டு. (பேருந்து எண்கள் 86A, 91, 91B, 91P, 107, 107A மற்றும் 138B)


மன்னர்களும், மகான்களும் வணங்கி வழிபட்ட இச்சிவாலயத்தினை திருப்பணி செய்ய வேண்டி உள்ளது.

புதிது புதிதாய் ஆலயங்கள் எழுப்பி பெருமைப்படுவதைவிட பெருமைவாய்ந்த பழம்பெரும் ஆலயங்களை புனரமைப்பது தலைசிறந்த புண்ணியம் என்பது பெரியோர்களின் வாக்கு. சைவத்தையும். வைணவத்தையும் இணைக்கும் இவ்வாலயத்தினை புதுப்பிப்பது அடியார்களின் தலையாய கடமையாகும்.

படங்களும், படைப்பும் / பனையபுரம் அதியமான்

# வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

"கருவில் கலந்த துணையே என்
கனவில் கலந்த அமுதே என்
கண்ணிற் கலந்த ஒளியே என்
கருத்திற் கலந்த களிப்பே"



என்று இறைவனை எந்தப் பெயரிலும் சுட்டிச் சொல்லாது அனைத்து மக்களுக்கும் பொதுவாக இறைவனை வள்ளல் பெருமான் போற்றுகின்றார். அகம் கறுத்து புறம் வெளுத்துக் காட்சி தரும் உலகை உய்விக்க வந்தவர் திருவருட் பிரகாச வள்ளல் என்று போற்றப்படும் இராமலிங்க வள்ளலார்.

வாழையடி வாழையாக வையகத்தில் எத்தனையோ அருளாளர்கள் தோன்றிடினும் சங்கம், சாலை, சபை ஆகியவற்றைத் தோற்றுவித்தும், திருவருட்பா போன்ற அருள் நூலை இயற்றியும் மக்களை நன்னெறிப்படுத்த அருளாளர்கள் இருவர் தமிழ்நாட்டில் தோன்றினர். ஒருவர் வைகுண்டர், பிறிதொருவர் இராமலிங்கர்.

குமரிச் சீமையில் தோன்றிய ஐயா வைகுண்டர், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களை உயர்த்துவதற்கு சமத்துவ சங்கம், சமதருமக் காலனி, சமபந்திப் போசனம், முந்திரிக் கிணறு என்ற அமைப்புக்களை அமைத்து, புலாலை மறுத்து அன்புக் கொடிமக்களாக அனைவரும் ஒருமையுடன் வாழவேண்டுமென்றார். இதற்காக கேரள மன்னனையும் மேட்டுக் குடிமக்களையும் எதிர்த்துப் போரிட்டார். மன்னன் சிறையில் அடைத்தான். சித்ரவதை செய்தான். நெருப்பிலிடுவேன் என்றான். கொடும்புலியைக் கூண்டிற்குள் அடைத்து, அதோடு ஐயாவையும் அடைத்தான் இறுதியில் மன்னன் பணிந்தான்.

நாவுக்கரசரை, மகேந்திர வர்ம பல்லவன் கொடுமைப்படுத்தியது போல் ஐயாவை குண்டரைக் கொண்டு கேரள மன்னன் கொடுமைகள் பல செய்து துன்புறுத்தினான். இறுதியில் அன்பு வென்றது. அறம் சிறந்தது.

குமரியில் தோன்றி கடைநிலைப்பட்ட மக்களைக் கடைத்தேற்றிய ஐயா வைகுண்டர்போல் வடலூரில் வள்ளலார் தோன்றி வையகத்துக்கு வாழ்வு தந்தார். எவ்வுயிரும் தன்னுயிர்போல் ஒருமைப்பாடு தழைக்கச் செய்யவுமே. தாம் இவ்வுலகிற்கு வந்ததாக வள்ளலார் பெருமான் கூறுகின்றார்.

### சன்மார்க்கக் கொடி

சன்மார்க்கம் என்ற சொல் திருமூலர் வாயில் பிறந்து மணிவாசகப் பெருமான் அருளால் வளர்ந்து, வள்ளல் பெருமானால் செழித்து வளர்ந்தது. சன்மார்க்கத்தை உலகில் பரப்பிட வள்ளலார் ஓர் இயக்கத்தையே தொடங்கினார். அந்த இயக்கத்திற்கு ஒரு கொடியும் உருவாக்கப்பட்டது.



வெள்ளைத் துணியில் மேற்பக்கத்தில் மஞ்சளும், கீழ்ப்பக்கத்தில் வெள்ளை வண்ணமும் கொண்டது சன்மார்க்கக் கொடி. இக்கொடியினை

பேராசிரியர் முனைவர். ச. கணபதிராமன்

முதன்முதலாக 23-10-1873 ஆம் நாள் காலை எட்டு மணிக்கு மேட்டுக் குப்பத்தில் சித்திவளாகத் திருமாளிகையில் வள்ளலார் ஏற்றினார்.

**இறைவனே தலைவன்**

சன்மார்க்க நெறியினையும், ஒளி வழிபாட்டினையும் உலகெல்லாம் பரப்பிட உறுதி கொண்ட வள்ளலார் இறைவன் அனைத்து சமயத்திற்கும் பொதுவானவன் என்று கூறி, பொதுவான சன்மார்க்க விண்ணப்பங்களைத் தந்தார். அவை

தனித்தலைமைப் பெரும் பதியாகிய பெருங் கருணைக் கடவுளே சன்மார்க்க நெறியின் தலைவன். அவனைக் "கருணாநிதியாகிய கடவுள்" சர்வ வல்லபராகிய கடவுள் "இயற்கை உண்மைப் பொருளாகிய கடவுள்" என்று அழைக்கலாம். இப்பெயர் அனைத்து சமயத்திற்கும் பொதுவான பெயர்.

**"உயிர்க்குலம் அனைத்திற்கும் தெய்வம்
ஒன்றே என்று நம்புதல்"**
**"அந்தத் தெய்வத்தை விக்கிரக வடிவில்
அல்லாமல் ஒளிவடிவிலே வழிபடுவது
சிறந்தது என உணர்தல்"**
**"சாதி சமய வருண பேதங்களை அறவே
விடுத்து மொழிவழிப் பட்ட இனங்கள்
நாடுகளிடையே ஒற்றுமைகண்டு, ஆன்ம
நேய ஒருமைபாட்டினை உருவாக்கல்"**
**"புலால் உண்ணுதல் - தெய்வத்திற்கு
உயிர்பலியிடுதல் ஆகிய தீய பழக்க
வழக்கங்களை அடியோடு ஒழித்தல்"**
**"சீவகாருண்ய ஒழுக்கத்தை
உலக மக்களுக்குப் போதித்தல்"**

என்பனவாம். டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் வள்ளலாரின் இச்சன்மார்க்கக் கொள்கை, பல்வேறு அறிஞர்களோடு கலந்து ஆய்ந்த பின்னரே வகுக்கப்பட்டது என்று கூறுகிறார்.

**சாதியும் சமயநெறியும்**

சாதியாலும் சமயத்தாலும் பிரிவுகளை உருவாக்கி உலகைக் கலக்கும் கீழ்மனம் கொண்டவர்களை வள்ளல் பெருமான் இடித்துரைக்கிறார்.

**"சாதியும் மதமும் காணா
ஆதி அநாதியாம் அருட்பெருஞ்சோதி"**
**"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"**
**"சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக்குப்பையும் தவிர்த்தேன்"**
**"இந்தச் சாதி இந்த மதம் எனும் சழக்கை
எல்லாம் தவிர்த்த சத்தியனே"**

என்ற சாதியினையும் சமயத்தையும் சாடுகின்றார்.

**ஞானக்கல்வி**

வள்ளல் பெருமானின் சன்மார்க்கத்தில் மக்களுக்குக் கல்வியைப் புகட்ட வேண்டும் என்பது ஒரு கொள்கையாகும். இதனை ஆண் - பெண் என்ற பால் வேற்றுமையின்றி எல்லோருக்கும் கல்வி அளித்தல் குறிப்பாக ஞானமார்க்கக் கல்வியை பெண்களுக்கு அளிக்க வேண்டும் என்பது வள்ளலாரின் தணியா வேட்கை.

**உலகம் வாழட்டும்**

உலகம் களிப்புற என்பது உலகில் உள்ள மனிதர்கள் மட்டும் களிப்புற என்பதன்று உயிர்கள் அனைத்தும் களிப்புற வேண்டும் என்பதேயாம். உயிர்கள் அனைத்தும் வெவ்வேறு உடலைக் கொண்டிருந்தாலும், அவையனைத்தும் ஆன்மாவால் ஒன்றியவையே என்பது வள்ளலார் கருத்தாகும்," இக்கருத்தை வள்ளலார் கொண்டிருந்தார் என்பதைச் சிலம்புச் செல்வர் டாக்டர் மா.பொ.சி.

"மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன தாவரம் என்பனவெல்லாம் உடலைக் காரணமாகக் கொண்ட வேற்றுமைகளே. அந்த வேற்றுமைகட்கும் ஆன்மாவிற்கும் சம்பந்தமில்லை என்பது அடிகளின் கருத்து"

என்று எடுத்துக் காட்டுகிறார். வள்ளல் பெருமானுக்குப் பின்னர் வந்த பாரதியும் இதே கருத்தினை

**"காக்கை குருவி எங்கள் சாதி - நீள் கடலும்
மலையும் எங்கள் கூட்டம்"** என்று பாடினார்.

**சகோதர அறம்**

உலக மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்களே என்று வள்ளல் பெருமான் குறிப்பிடுகிறார். இதனை டாக்டர் ம.பொ.சி

"அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக் கொண்டு இந்தியாவில் சகோதர அறம் நிலை நாட்டப்

பெறல் வேண்டும்"

என்று எடுத்துக் காட்டுகிறார்.

வள்ளலாரின் மேற்கண்ட வரிகளுக்கு டாக்டர் ம.பொ.சி மிகச் சிறந்த விளக்கம் தருகிறார். "இந்த வாசகத்தால் இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை அடிகள் ஏற்றுக் கொண்டது தெளிவாகும் "சகோதரம் அறம்" என்ற வடலூர் முனிவர் கூறியதையே தேசிய ஒருமைப்பாடு என்ற வாசகத்தில் வர்தா முனிவரும் வலியுறுத்தினார். இந்தியா ஒன்று படும் நிகழ்ச்சியை 'அறம்' என்றதால் அந்த ஒற்றுமைக்கும் எதிரான முயற்சி 'பாவம்' என்பது புலனாகும் - அடிகளார் இந்தியாவை ஒரே நாடாகக் கருதியிருப்பது இன்றைய தலைமுறையினரின் கவனத்திற்குரியதாம். ஆம், ஆன்மநேய ஒருமைப்பாட்டுலகில் எந்தவொரு நாடும் எந்தவொரு இனமும் தனித்து வாழ இயலாது. இதுவே சுத்த சித்தாந்தத்தின் அரசியல் சித்தாந்தம். உரிமையும் ஒருமையும் பிணைந்த ஒன்றே அடிகளார் விரும்பிய உலக அரசியல்" என்பது சிலம்புச் செல்வரின் சீரியக் கருத்து.

இந்திய தேசிய ஒருமைப் பாட்டினை விரும்புவோருக்கும். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை நாடுவோருக்கும், மிகச் சிறந்த வழிகாட்டியாக வடலூரார் விளங்குகிறார் என்கிறார் சிலம்புச் செல்வர்.

## ஒருமைப்பாட்டின் தடைக்கற்கள்

தேசிய ஒருமைப்பாட்டிற்கு தடைக்கற்களாக நிற்பவை சாதி, இனம், மொழி ஆகியவையாகும். இம்மூன்று வெறிகளையும் வள்ளல் பெருமான் ஒழிக்க வேண்டும் என்கிறார்.

"எம் குலம் எம் இனம்
என்பதொண்ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி"

என இன வெறியைச் சாடுகிறார்.

மொழி வெறியினையும் வள்ளல் பெருமான் வெறுக்கிறார். வள்ளலார் வட மொழியினை வெறுத்து ஒதுக்கவில்லை. தமது பாடல்கள் பலவற்றில் வட மொழியினைக் கையாண்டுள்ளார். தொழுவூர் வேலாயுத முதலியாருக்கு வள்ளலார் வடமொழியினை பயிற்றுவித்த வரலாறும் உண்டு.

## வடலூர்க்குச் செல்லும் வழி

சாதி, சமய, இன மொழி வெறிகளை உதறித் தள்ளி ஒருமைப்பாட்டில் உணர்வைச் செலுத்திய வள்ளல் பெருமானின் சமரச சுத்த சன்மார்க்க நெறியில், இரக்கம் என்ற அறம் எல்லா உயிர்களிடத்தும் இயல்பாய் அமைந்து விடும், இறைவனிடம் உருக்கமும் நெருக்கமும் கொள்ள வழிபிறக்கும். உடைமைகள் பொதுவுடைமைகளாகி விடும். உலகும் ஒருமைப் பாட்டோடு ஒளிரும். இதனை,

"இரக்கம் உயிர்மாட்டு இயல்பாய் உருகும்
உருக்கம் இறைவன் ஒருவன் பால் பெருக்கும்
வடலூர்க்குச் செல்லும் வழி"

என்ற பாட்டால் அறியலாம்.

## பாரதியின் மதிப்பீடு

பாரதி வள்ளலாரை தனியாக பாடவில்லையாயினும் வள்ளலார் மீது கங்குகரையற்று பற்றுக் கொண்டிருந்தார். வள்ளலாரின் பாக்களை தாம் சுவைத்துச் சுவைத்துப் பாடி தம் குழந்தைகளுக்கும் கற்பித்தார் வள்ளலாரின்

"நான் படும்பாடு சிவனே உலகர் நவிலும் பஞ்சு
தான் படுமோ சொல்லத்தான் படுமோ எண்ணத்
தான்படுமோ
கான்படு கண்ணியில் மான்படுமாறு கலங்கி
நின்றேன்.
ஏன்படுகின்றனை என்று இரங்காய் என்னில்
என் செய்வேனே"

என்ற பாடலைப் பாரதி, அடிக்கொரு முறை பாடுவார் என்று "சகுந்தலா பாரதி" என் தந்தை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளல் பெருமானின் பாடல்கள் அனைத்திலும் உள்ளத்தைப் பறிகொடுத்த பாரதி அவரது கருத்துக்களையும் தமது உள்ளத்தில் பதித்துக் கொண்டார்.

"எம்மதம் சம்மதம்" என்றார் இராமலிங்கர். உலகில் மத பேதங்களை எல்லாம் வேருடன் களைந்து சருவ சமய சமரசக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ்நாடே சரியான களம். உலகம் முழுவதும் மதவிரோதங்கள் இல்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது வாழும்படி செய்யவல்ல மகான்கள் இப்பொழுது தமிழ் நாட்டில் தோன்றி இருக்கிறார்கள்" என்பதாம். பாரதி குறிப்பிட்டது போல அந்த மகான்கள் வழியில் நின்று சமய நல்லிணக்கம் பேணி, சான்றாண்மை வாழ்வை மேற்கொண்டு தமிழகம் - பாரதம் - உலகம் - தழைக்கட்டும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்களந்தைப்பதிகம்

(தேவாரப் பாக்களை அடியொற்றி அண்மையில் வரையப் பெற்றது)

திரு. எம். குப்புசுவாமி, பி.இ., எம்.எஸ்., சென்னை.



திருஞானசம்பந்தர்

என்பறாக் கோல நீடி இமயவில் வாங்கிப் பாரோர்
துன்புறா தூக்கிக் காக்கத் தென்களக் காட்டி னுள்ளார்
வன்பராய்க் கட்டை யன்ன வம்பனென் றென்னைத் தள்ளார்
அன்பராய் ஆண்டு கொண்டார் அவிர்சடைக் கடவுளாரே. - 1

நண்ணலார் புரங்கள் மூன்றும் நையநக் கெரித்தா ரேனும்
பண்ணினாற் பரிவு கொண்டார் விண்ணுயர் கைலை யென்றே
எண்ணிலா வரங்கள் வேண்டி எண்ணுநற் களந்தை கண்டீர்
வெண்ணிலா அணியி னானை விளம்பிநா னுய்ந்த வாறே - 2

இரும்புலி யுரியி னானை இமயவால் வரையி னானைத்
துரும்பொடு பெருங்கல் அன்றித் தொல்லுயிர் அனைத்தும் ஊக்கி
அரும்புகழ்த் தமிழாற் பாடல் ஆக்கிவைத் தமர்ந்தான் றன்னைப்
பெரும்புகழ்க் களந்தை யூருள் பேசிநா னுய்ந்த வாறே. - 3

உருக்கத்தோ டுள்கினாரை உளங்கொண்ட செல்வர் கண்டீர்
எருக்கத்தம் பூவும் சூடும் ஈர்ஞ்சடை யப்ப னாரே
செருக்கினால் தீது சூழ்ந்த செறிகடல் தென்னர் கோன்றன்
தருக்கற அடர்த்து நின்றார் திருக்களக் காடனாரே - 4



திருநாவுக்கரசர்

மெய்ம்மறை வாக்கிற் கீசர் மூவர்க்குங் கோனென் றோர்ந்தேம்
பையுறை நாக மூரும் ஆகத்தோர் பாகம் பெண்ணாய்ச்
செய்யரைப் புன்னை நீழல் செறிகளக் காட்டு ளோங்கும்
ஐயரை யல்லால் மற்றோர் தெய்வநா முள்கே மாதோ. - 5

என்றுகொல் ஈசற் காண்போம் என்றுநாம் எந்தை தாள்கீழ்
ஒன்றியிப் பவநோய் தீர்கேம் என்றினி இரங்கல் வேண்டா
தென்றிசை மாறன் செய்த பொன்றிகழ் களந்தை மன்றுள்
துன்றுபொற் சடையி னான்முன் சென்றுநாம் தொழுத வாறே. - 6

எண்ணுமாய் எழுத்து மாகி எண்ணொணாத் திறத்த ராகிப்
பண்ணுமாய்ப் பாட்டுமாகிப் பாண்டியர் பணியு கந்தார்
விண்ணுளார்க் கரிய ராகி விரிபுனற் களந்தை யூருள்
மண்ணுளார் தெரிய நின்றார் மான்மறிக் கைய னாரே. - 7

நாணாகப் பணியொன் றேற்றி நண்ணலார் புரங்க ளெய்தார்
வாணாள்பின் ஈத்து கந்தார் வார்கடல் தென்னர் கோற்கும்
தூணாகிக் கீழ்மேல் காணாத் திறத்தரென் றாட்பட் டுய்கேம்
நீணாகம் ஆகங் கொண்ட நெடுங்களக் காட னார்க்கே. - 8


சுந்தரர்

எதுமறை என்னத் தேடி எங்கணும் காணார்க் கெல்லாம்
பொதுமறைச் சைவம் காட்டிப் பேணிநின் றார்க்கெம் சென்னி
புதுச்சிறைப் புனல்வண் டார்ப்பப் பொலிகளக் காட்டு ளேகி
முதுமறை சிலம்பாக் கொண்ட முளரிய தாட்கீழ் வைப்பாம். - 9

மன்னுக சைவ மெங்கும் மறையொலி ஓங்கிக் கேட்கத்
தென்னகக் களந்தை நல்லூர் தரணியோர் தெரியக் காட்டிப்
பன்னக அணியி னானைப் பணிந்தசீர் பரவி யேத்த
மன்னகம் நினைந்தார் வாழ்க வளர்கநல் லடியா ரெல்லாம். - 10

சடையானைச் சடையதுமேற் கொண்டோங்கு சிறுகீற்றுப்
பிறையானைச் சதுர்மறையோ டாறங்கம்
உடையானை அடியர்வினை உடைப்பானை அவர்துயரம்
துடைப்பானைப் பவமறுக்கும் வெண்ணீற்றுப்
படையானை மூவுலகும் படைப்பானை அடல்ஊர்தி
விடையானாய் வியன்களந்தை யூர்க்கோயில்
அடைவானை அடையாளம் கண்டெனையாள் கெனவரற்றி
அடிநாயேன் அவனொடுசென் றணைந்த வாறே


மாணிக்கவாசகர்

கல்லா லெறிந்திலேன் கைச்சிலை ஓச்சிக் கடிந்தறியேன்
கல்லால் நிழலடிக் கீழமர் நால்வருக் கீத்துகந்தாற்
கல்லால் பிறர்க்கு நான் ஆட்படேன் என்று நின்றார்ப்பரிக்கக்
கல்லா எனையும் நீ கூட்டுகண் டாயுள் கழலிணைக்கே

குறிப்பு : களந்தை (களக்காடு என இப்போது போற்றப்பெறுவது) நெல்லை மாவட்டத்திலுள்ளது. அப்பர்பெருமான் அருளிச் செய்த திருவூர்த்தொகையில் களக்குடி என இசைக்கப் பெற்றதும் இதுவே.



# வேலும் மயிலும் துணை


## கந்தர் அனுபூதி

(போராசிரியர் டாக்டர். சரசுவதி இராமநாதன்)

சென்ற இதழ் தொடர்ச்சி....

இனி அடுத்த திருப்பாடலைக் காணலாம். நாகாசலம், சர்ப்ப சயிலம் என்று அழைக்கப்படுவது திருச்செங்கோடு. செங்கோடன். செங்கோட்டுவேலன், செங்கோட்டையன் என்ற பெயர்கள் கொங்கு நாட்டில் அதிகம். தெய்வத் திருமலை திருச்செங்கோடு என்பர் நம் அருணகிரி சுவாமிகள். முருகனின் கையிலிருப்பது வேல். வேல் ஃ ஆய்த எழுத்தைப்போல். மூன்று புள்ளிகளை இணைத்தால் வேலின் வடிவம் வரும். ஆழமாக, அகலமாக, கூர்மையானதாக வேல் இருக்கும். அறிவும் அப்படி இருக்க வேண்டும். தெய்வ நாயகன் முருகன். பகைவனை அழிக்காமல், பகைமையை அழித்தது வேல். வேல், வேலு, வேலுமணி, வேலப்பன், வேலய்யன், வேலவன், வேலாயுதம், வடிவேல், சித்ரவேல், ஞானவேல், சக்திவேல், வஜ்ரவேல், தங்கவேல், முத்துவேல், ரத்தினவேல், சிங்காரவேல், ஞானவடிவேல், சிங்காரவடிவேல், மயூரவேல், வெற்றிவேல், வீரவேல் என்று நம் நாட்டில் வேலை வைத்து எத்தனை பெயர்கள்.

'மாலோன் மருகனை' என்ற அலங்காரப் பாடலில் இந்தச் செங்கோட்டு வேலனைப் பார்க்க நாலாயிரம் கண்களை எனக்கு நான்முகன் தரவில்லையே என ஏங்குவார் சுவாமிகள்! தமிழ் கவி நான்கு வகைப்படும். ஆசுகவி, மதுரகவி, வித்தார கவி, சித்ரகவி, சொன்னவுடன் பாடுவது ஆசுகவி. வெள்ளியம்பலத் தம்பிரான் இலக்கணம் இலக்கியங்களில் மிகச்சிறந்தவர். அவர் சிவப்பிரகாச சுவாமிகளிடம், 'கு' வில் ஆரம்பித்து 'கு' வில் முடிய வேண்டும் ஒரு பாட்டு பாடு என்று கேட்டார். அவர் உடனே பாடலை ஆரம்பித்து "குடக்கோடு...... உலகு" என்று முடித்தவுடன் தம்பிரான் நடந்து சென்று சிவப்பிரகாச சுவாமிகளை கட்டி தழுவிக் கொண்டு இலக்கணம் படிக்க வந்தாயா. கற்பிக்க வந்தாயா என்று கேட்டார்- இதுதான் ஆசுகவி, பொருளும் இருக்க வேண்டும். விபரமும் இருக்க வேண்டும். அறிஞர்கள் பாராட்டும் சாமர்த்தியமும் இருக்க வேண்டும். மதுரகவி என்றால் இனிமையான பாடல் பாடுவது. அற்புதமாக விளித்துப் பாடுவதற்கு, விஸ்தாரக் கவி என்று பெயர். நாகபந்தம், மயூர பந்தம் என்று பாடுவதற்கு சித்ரகவி என்று பெயர். நான்கு கவிகளையும் முருகன் எனக்குக் கொடுத்தார் என்று அருணகிரிநாதர் கூறினார். 'யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்' என்றார். முக்தர்கள் இறந்தால் அழக் கூடாது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் இறந்தார் என்று கிடையாது.



இறப்பினால் ஏற்படுகின்ற அவலத்தைப் போக்கிக் கொள்கிற முயற்சியிலேதான் நாம் இருக்கிறோம். பொருள் அற்ற கத்தல் "கூ, கா" என்று அழுவது. அது பொய்யான அழுகை. அப்படி உறவினர் அழாமலிருக்க மெய்ப்பொருளை உபதேசித்த முருகா! என்கிறார். சந்தோஷம், துக்கம் ஆகிய இரண்டும் மாறி மாறி இருக்கிற வாழ்க்கை. வாழ்க்கையே பொய். நம் வாழ்க்கையைச் சூத்திரதாரியாக இறைவன் இருந்து நடத்துகிறானே அதுதான் மெய். எந்த பொருளையும் முழுக்க மனிதனால் படைக்க முடியாது. ஆனால் மாற்ற முடியும். அதேபோல் மனிதனால் ஒன்றையும் காப்பாற்ற முடியாது. என் உடம்பையே என்னால் காப்பாற்ற முடியாது. ஆகையினால் எல்லாவற்றையும் படைக்கிறவன் எல்லாவற்றையும் காக்கிறவன், அவன்தான் ஆண்டவன் முருகப்பெருமான். சத்தியமான பொருள். அதனால் 'மெய்ப்பொருள் பேசியவா' என அவனைத்துதிக்கிறார்.

**'கூகா எனஎன் கிளை கூடி அழப்**
**போகா வகைமெய்ப் பொருள் பேசியவா**
**நாகாசல வேலவ நாலு கவித்**
**தியாகா கரலோக சிகா மணியே!'**

அடுத்த பாடலில் வள்ளி கல்யாணம் குறித்து பேசுகிறார்.

முருகப்பெருமான் அந்தப் பிஞ்சுக் காலில் சலங்கையுடன் வந்து அருணகிரிநாதரின் முதுகைத் தட்டி, காதுக்குள் 'சும்மாயிரு' என்று கூறினதாகக் கூறுகிறது. இந்தப்பாட்டு, காஞ்சிப் பெரியவர்கள் கருடாசனம் போட்டுக் கொண்டே சுமார் 6 மணி நேரம் வரை தியானத்திலிருப்பார்கள். சும்மா இருப்பது மிகவும் கஷ்டம். ஒரு கோயிலில் ஒரு சாமியார் இருந்தார். அவர் சும்மா தான் இருப்பார். அவருக்கு அந்தக் கோயிலில் இருந்து தினம் ஒரு பட்டை சோறு கொடுப்பார்கள். அப்போது வேறு ஒரு நிர்வாக அதிகாரி வந்தார். சும்மா இருக்கிற சாமியாருக்கு ஏன் ஒரு பட்டை சோறு கொடுக்க வேண்டும் "நிறுத்து" என்றார். அப்போது எல்லோரும் சொன்னார்கள். "வேண்டாம், சும்மாயிருப்பது மிகவும் கஷ்டம்" என்று. "நான் இருக்கிறேன்" என்று கூறினார்.

அன்று காலையிலிருந்து சும்மா இருந்தார். அப்போது மனைவி வந்து இன்று என்ன சமையல் செய்ய? என்று கேட்டாள். அதற்கு அவர் சும்மாயிருந்தார். அவள் கோபித்துக் கொண்டு சென்றுவிட்டாள். அதன்பின் பள்ளிக்குச் சென்று வந்த பையன் சைக்கிளில் அடிப்பட்டுக் கொண்டு வந்துவிட்டான் என்று வந்து சொன்னவுடன் இவர் எழுந்திருந்து ஓடிச்சென்று பார்த்து ஆக வேண்டியவற்றை கவனித்தார். அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது "ஆகா, சும்மா இருப்பது எவ்வளவு கஷ்டம்" என்று உடனடியாக கோயிலுக்கு வந்தார். "அந்தச் சும்மா இருக்கும் சாமியாருக்கு இன்று முதல் இரண்டு பட்டை சோறு கொடு" என்று உத்திரவிட்டார். அதற்கு என்ன அர்த்தம். முருகப் பெருமானின் பாதங்களை பிடித்தால் சும்மாவே இருக்கலாம்.

அம்மா பொருள் ஒன்று அறிந்திலேன்! என வியக்கிறார் அருணகிரி, "அம்மா! பொருள் தெரியவில்லை. அந்த மா(மகத்தான) பொருள் தெரியவில்லை" என இரு பொருள் தரும்! தெய்வங்களுக்குள் சிறந்தவனாக இருக்கிறவன் முருகப்பெருமான். சிவபெருமானும் பிறக்காதவர். அதே போல் முருகப் பெருமானும் பிறக்காதவர். திருஞானசம்பந்தர் முருகனின் அவதாரம் என்று சொல்கிறார்கள். முருகன் சாதாரணமாகப் பிறக்க மாட்டான். பிறந்தால் சாகமாட்டான். ஞானசம்பந்தர் இறக்கவில்லை. சோதியானார் நமக்குதான் இறப்பு உண்டு.

**"செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**சும்மா இரு சொல் லறஎன் றலுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே."**

என்றார்.

- தொடரும்

# பகல்பத்து, இராப்பத்து உத்ஸவம்



இந்திரா ஆராவமுதன் - ஸ்ரீரங்கம்

க்ருதயுகத்தில் கர்த்தமன் என்ற அந்தணனாகவும், த்ரேதாயுகத்தில் உபரி சரவசு என்ற க்ஷத்திரியனாகவும், த்வாபர யுகத்தில் சங்க பாலன் என்ற வைசியனாகவும், கலியுகத்தில் கள்ளர் வம்சத்தில் நீலனாகவும் பிறந்தார். பின் தன் நற்செய்கைகளினால் திருமங்கை ஆழ்வாராக மாறி ஏற்றம் அடைந்தார் என்பது தான் சிறப்பு.

பகவானின் பாதஸ்பர்ஸம் கிடைக்கப் பெற்று, "சிவன் நம் கலியனோ" என்று பகவானால் அழைக்கப்பட்டு கவி பாடும் திறனும் பெற்றார். இந்தளூர் பெருமானிடம் "உமது நிறம் என்ன" என்று கேட்க அவரும் காட்டாததால் "இந்தளூரீரே! வாழ்ந்தேபோம் நீரே" என்று கோபித்து கொண்டவரும் இவர்தான்.

இவருடைய பாசுரங்களில் மயங்கிய திருக்கண்ணமங்கை பெருமாளிடம், "உமக்கு என் கவியின் பொருளைக் கற்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் என்னிடம் சீடனாக வாரும்" என்று அறைகூவல் இட்டார்.

அதற்கு பெருமாள் எவ்வளவு வினயமாக பதில் கூறுகிறார், பாருங்கள், "இப்போது சர்ச்சையில் கற்க முடியாது. பின்னாளில் நீர் கார்த்திகை மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் கலிகன்றிதாசர் என்ற நம்பிள்ளையாக அவதரிப்பீர். அப்போது நானும் அதே சோழநாட்டில் ஆவணி ரோஹிணியில் க்ருஷ்ணன் என்ற பெரியவாச்சான் பிள்ளையாக அவதாரம் செய்வேன். உம்மையே ஆசானாகக் கொண்டு அருளிச் செயல்கள், ரஹஸ்யத்ரயம், ராமாயணம் ஆகியவற்றின் அர்த்தங்களை கற்றுக் கொண்டு உலகத்துக்குத் தெரியப்படுத்துகிறேன்" என்று உறுதி அளித்தான்.

அவ்வாறே நம்பிள்ளையிடம் பாடம் கற்ற பெரியவாச்சான் பிள்ளை ராமாயணப் பெருக்கர் என்றும், நாலாயிரத்துக்கும் வியாக்யானம் செய்ததால் வியாக்யான சக்ரவர்த்தி என்ற பட்டங்களைப் பெற்றார். திருப்பாவைக்கு

கள்ளர் வம்சத்தில் பிறந்த நீலன் பெரிய வீரனாக செயல்பட்டதைக் கண்டு மகிழ்ந்த சோழ அரசன் அவனைத் தன் கீழ் பணிபுரியும் குறுநில மன்னனாக ஆக்கினான். மங்கை நாட்டையும் தந்தான். அதனால் ஆலிநாடன், மங்கை மன்னன் என்றெல்லாம் அழைக்கப் பெற்றான்.

அவனை சன் மார்க்கத்தில் ஈடுபடுத்தி திருமங்கை ஆழ்வாராக மாற்றிய பெருமை அவன் மனைவியான குமுதவல்லியையே சாரும். 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே தன் மனைவியான குமுதவல்லியுடன் காட்சி தரும் பேறு பெற்றவர் ஆவார்.

பகவான் ச்ருஷ்டி செய்ததாகக் கூறும் 4 வர்ணங்களிலும் அடுத்தடுத்து வரும் 4 யுகங்களிலும் ஒருவரே மறுபிறவி எடுத்து வாழ்ந்தார் என்பது வியக்கத்தக்க விஷயம் அல்லவா? அந்த ஒருவர் திருமங்கை ஆழ்வார் ஆகும்.

உரையாக மூவாயிரப்படியையும், அருளிச் செயல்களுக்கு உரையாக இருபத்தி நாலாயிரம்படியையும் அருளினார்.

இவருடைய வியாக்யானங்களை செவி சாற்றிய ஸ்ரீரங்கநாதர் இவருக்கு "அபயப்ரத ராஜர்" என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினார். ராமானுஜருக்கு கூட 5 தனிதனி ஆசாரியர்களை தேடித்தேடி சென்று கற்கவேண்டிய நிலை இருந்தது. இவருக்கோ ஒரே ஆசாரியிடம் எல்லாவற்றையும் கற்கும் பாக்கியமும், வெளிப்படுத்தும் வாய்ப்பும் கிடைத்தது. அதனால் நம்பிள்ளையை கல்விக்கடல் என்று அழைப்பதில் தவறு இல்லை என்று எண்ணுகிறார்.

நிற்க, திருக்கார்த்திகை பௌர்ணமி உத்ஸவ தினத்தில் கலியன் தனது பாசுரமான திருநெடுந்தாண்டகத்தை பாடியதைக் கேட்டு மகிழ்ந்த அரங்கன், "உமக்கு என்ன வேண்டும்?" என்று வினவினார். நம்மாழ்வாரின் ப்ரபந்தம் திருவாய்மொழிக்கு வேதசாம்யம் தரவேண்டுமாய்ப் பிரார்த்தித்தார்.

அன்று முதல் தான் ஆழ்வார் திருநகரியில் இருக்கும் நம்மாழ்வாரை ஏகாதசி பெருவிழாவுக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரும் ஓலை அனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. மார்கழி மாதத்தில் அவர்கள் வந்தபின் ஏகாதசி முதல் 10 நாட்களுக்கு திருவாய்மொழியைக் கேட்டருளி 10ம் நாள் வேதங்களைப் பூர்த்தி செய்து, க்ரமத்தில் அவரைத் தம் திருவடிகளில் சேர்த்துக் கொண்டு மாலை, திருமண்காப்பு அனுக்ரஹித்து, திரும்ப ஆழ்வார் திருநகரிக்கு அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. இவ்வாறுதான் கடைசி ஆழ்வாரான இளங்கிளி திருமங்கை ஆழ்வாரின் சிபாரிசினால் ஆழ்வார்களின் தலை எனப்படும் முதுகிளியான நம்மாழ்வாரின் பாசுரங்களை ஏகாதசி உத்ஸவத்தில் அனுபவிக்கும் பேறு பெற்றோம்.

தாளம் வழங்கிய வள்ளலான ஸ்ரீமந் நாதமுனிகளின் அயராத முயற்சியினால் நாலாயிரம் திரும்பக் கிடைக்கப்பெற்றது. இவர்தான் ஏகாதசிக்கு முந்திய 10 நாட்களை பகல் பத்து என்றும் பிந்திய 10 நாட்களை இராப்பத்து என்றும் பிரித்தார். பகல் பத்தில் மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களை அபிநயித்துப் பாடும் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டு இராப்பத்து பூராவும் திருவாய்மொழிக்கு ப்ரதான்யம் கொடுத்து விட்டு, அதன்பிறகு இயற்பா சாற்று முறையையும் ஏற்படுத்தினார். நம்மாழ்வாரை ஆழ்வார் திருநகரியிலிருந்து எழுந்தருளப்பண்ணுவது கடினம் என்று நினைத்து எல்லா ஆழ்வார்களுக்கும் சன்னிதியை ஏற்படுத்தி உத்ஸவத்தை சிறப்பாக கொண்டாடி வந்தார்.

கூரத்தாழ்வாரின் புதல்வரான வேத வ்யாச பட்டர் ராமானுஜரின் சீடர் ஆவார். இவர் தன் குருவின் கட்டளையை ஏற்று மேலை நாடு என்றழைக்கப்படும் மைசூருக்கு சென்று வேதாந்தி என்ற அத்வைதியை நஞ்சியராக மாற்றினார்.

அரங்கன் பட்டரைப் பார்த்து "வேதாந்தியை எவ்வாறு மாற்றினீர்" என்று கேட்க, இவ்வாறு தான் என்று சொல்லி திருநெடுந்தாண்டகத்தை அபிநயித்து காட்டினார்.


இப்போது நாம் ரசிக்கும் ஏகாதசிப் பெருவிழாவின் முதல் அம்சமாக மார்கழி மாத அமாவாசை அன்று மாலை ரங்கநாதன் சன்னிதியின் முன்பாக அரையர்கள் திருநெடுந்தாண்டகத்தை அபிநயித்துக் காட்டும் வழக்கம் பட்டரால்தான் அறிமுகம் செய்யப்பட்ட ஒன்று. மறுநாளிலிருந்து அர்ஜுன மண்டபத்தில் பகல் பத்து உத்ஸவத்தை 10 நாட்களுக்கு பகலிலும், ஏகாதசியிலிருந்து ராப்பத்து உத்ஸவமான 10 நாட்களை இரவில் ஆயிரங்கால் மண்டபத்திலும் கண்டு களிக்கிறோம். இயற்பா சாற்றுமுறையாகி உத்ஸவம் 21 நாட்கள் வெகுசீரும் சிறப்புமாக கொண்டாடப்படுவதைப் பார்க்கும் பேறு பெற்றோம். முகமதிய படையெடுப்பினால் இந்த உற்சவம் தடைப்பட்டு, பின் மணவாள மாமுனிகள் ஒழுங்குப்படுத்தினார். நம்பெருமாளும் சுமார் 46 வருடங்கள் அக்ஞாதவாசம் இருந்துபின் ஆஸ்தானத்துக்கு திரும்பினார். கலியின் திருவிளையாடல்!

ஆக இதுதான் ஏகாதசிப் பெருவிழா மறுமலர்ச்சி பெற்ற விபரம்.

# கந்தபுராண நுண்பொருள்

நினைவலைகள்

சென்ற இதழ் தொடர்ச்சி.....



அருணகிரிநாதர் சொன்னார்.

**"வாசித்துக் காணொ ணாதது**
**பூசித்துக் கூட ஒணாதது**
**வாய்விட்டுப் போசொ ணாதது விந்துநாத**
**ஓசைக்குத் தூரமானது."**

அதற்கு அப்பாலே இருக்கிறது. அந்தப் பிரணவம். விந்து நாத ஓசைக்குத் தூரமானது. ஆகவே விந்திலேயிருந்து நாதம் வருகிறது. விந்து என்பது சுழன்றது. வந்தது நாதம். அப்பொழுது இந்த 'உ'னா இருக்கிறதே இப்படிப்போட்டு இப்படி வந்து இப்படி வருகின்றது. 'உ' னாவிலே கழுத்து இருக்கு. பிள்ளையார்சுழிக்கு கழுத்து கிடையாது. அந்தச் சுழி அப்படியே வெறும் கோடு. (கீழே வயிறு வராது) இப்பொழுது போடும் புத்தகங்களிலே (உ) பிள்ளையார் சுழியே கிடையாது. எத்தனையோ காலமாய் பாரம்பரியமாக இருந்த தர்மங்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்கள் கை நழுவ விடுகிறார்கள். அதனுடைய தத்துவங்கள் அவர்களுக்கு விளங்கமாட்டா. ஆகவே இந்த மகத்தான தத்துவங்களையெல்லாம் முருகப் பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தாராம். சிவபெருமானுக்குத் தெரியாதது என்று அர்த்தமில்லை. சிவனே முருகன்; முருகனே சிவன். எப்பொழுதுமே அப்பாவை விட குழந்தைக்குக் கொஞ்சம் பெருமை அதிகமாய் இருக்கும். வெண்ணெய் தானே நெய். வெண்ணெயில் மணம் இருக்காது. நெய் மணக்கும். முருங்கைத் தழை போட்டுக் காய்ச்சினால் மூக்கைத் துளைக்கும். பிரணவத்தினுடைய தத்துவங்களைச் சொன்னேன். இதுதான் 'ஓங்காரம்'; இங்கே அகரம் இங்கே உகரம் கீழே மகரம். அகரம் சிருஷ்டிக்கிறது. உகரம் ரக்ஷிக்கின்றது. மகரம் சம்ஹாரம் பண்ணுகிறது. சம்ஹாரம் என்றால் கொன்று விடுவது என்று அர்த்தம் பண்ணக்கூடாது. ஒரு கடவுள் எல்லாவற்றையும் கொன்றுவிட்டார் என்றால் அவர் கொலைகாரன் என்று தானே பெயர். சம்ஹாரம் என்றால் கொன்று போடுவது என்று அர்த்தம் கிடையாது. இந்த உலகத்தையெல்லாம் விரிவுபடுத்துவது சிருஷ்டி. அதை நிலைபெறச் செய்வது ரக்ஷகம். மறுபடியும் கொண்டுபோய் ஒடுக்கி விடுவது சம்ஹாரம். இந்த மாலைக்கு ஹாரம் என்று பெயர். அது ஹ்ரு என்ற தாதுவிலிருந்து வந்தது. உதிரிகளாக இருந்த மலர்களை ஒடுக்கி வைப்பது ஹாரம். நன்றாக ஒடுக்குவது சம்ஹாரம். ஒரு உதாரணம் சொல்கிறேன். குழந்தையை எழுப்புகிறாள்-அது சிருஷ்டி. உணவு தருகிறாள்-அது ரக்ஷகம். தொட்டிலில் வைத்து தூங்க வைக்கிறாள்-அது சம்ஹாரம். குழந்தையை ஒடுக்கி விடுவது. தூங்க வைப்பது. தூங்க வைப்பது ரொம்ப முக்கியம். தாலப்பாட்டு என்றே ஒன்று உண்டு. ஓதுவார்பாடுவார். 'தாலேதாலேலோ, சங்கரிதன்குமரா மங்கையர்தம் கணவா தாலோ தாலேலோ' என்று பிள்ளைத் தமிழிலே,

தாலப்பாட்டு என்று இருக்கிறது. குழந்தையைத் தூங்க வைக்கிறது. அது என்ன பொருள்? தால் என்றால் நாக்கு. இந்த நாக்குக்குத் தால் என்று பெயர். "துதித்திடல் வேண்டும் தாலு" என்பது கந்தபுராணம். அந்த நாவை அசைப்பதற்குத் தமிழிலே இரண்டு எழுத்துக்களைச் சொன்னால் நாக்கு அசையும். இந்த நுனி நாக்கை மேலண்ணத்தில் வைத்து தம்புரா தட்டுகிற மாதிரி அப்படித் தட்டி விட்டால் 'ரா' வரும். 'லா' வரும். அப்பொழுது 'ரா,ரா, என்று தட்டினால் தம்புரா தட்டுகிற மாதிரி இருக்கிறது இல்லையா. ரா,ரா,ரா என்று வேதாந்தத்தோடு குழந்தையைத் தாலாட்டுகிற பாட்டுக்குத் தாலப்பாட்டு என்று பெயர். பிள்ளைத் தமிழிலே தாலாட்டுகின்ற பாட்டு ரொம்ப அருமையானது. அப்படிக் குழந்தையைத் தூங்க வைப்பது சம்ஹாரம். பிரணவத்திலே இந்தச் சுழி அகரம். இது உகரம். கீழே மகரம். அகர, உகர, மகரம். 'ஒ' நாதம், விந்து. அதைக் கேட்டவுடனே சிறிது ஞானம் வருகிறதே அது கலை. எனவே அகர, உகர, மகரம், நாதம், விந்து, கலை. இந்த ஒரெழுத்திலே இந்த ஆறெழுத்தைச் சொன்னாராம் முருகன். அருணகிரியார் பாடுகின்றார்.

**"காது முக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாமா**
**காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி**
**யிமையோரை**
**ஒது வித்த நாதர் கற்கவோது வித்த முனிநாண**
**ஒரெழுத்தி லாறெழுத்தை யோது வித்த**
**பெருமாளே"**

இது திருக்கழுக்குன்றம் திருப்புகழ். வேதாசலம். வேதாசலம்தானே ஆறெழுத்தைச் சொல்ல வேண்டும்.

**"ஒரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே"** என்ற அருணகிரிப் பெருமான் அற்புதமாகப் பாடியிருக்கிறார். இந்தப் பிரணவம் சாஸ்திர ரீதியாக அப்பாவுக்குச் சொன்னாராம். அதனாலே சிவகுரு, குமரகுரு, பரமகுரு, குருசுவாமி, குருபரன் என்று அநேக நாமங்கள் அவனுக்கு உள்ளன. அப்பொழுது தேவர்கள் எல்லோரும் வந்து சிவனிடத்தில் முறையிட்டார்கள். சூரபன்மனுடைய ஆட்சிக் கொடுமை தாங்க முடியவில்லை என்று சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் மூன்று பேர். இன்னொரு தடவை. சொல்லுகிறேன். சூரபன்மன்; சிங்கமுகனுக்கு ஆயிரம் தலை, இரண்டாயிரம் கை. தாரகாசுரன், இந்த மூன்று பேரையும் எம்பெருமான் அடக்கி வைத்தார். அப்படி என்றால் என்ன பொருள்? நம்முடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆணவ மலம். இப்பொழுது நான் சொல்வதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் ஆணவ மலம் அந்த ஆணவ மலம் ஆன்மாக்களுக்கு இடையே வந்ததல்ல. ஆன்மா என்றைக்கு உண்டோ அன்றைக்கே ஆணவமலம் உண்டு. செம்பு என்றைக்கு உண்டோ அன்றைக்கே களிம்பு உண்டு. அரிசி என்றால் தவிடு இருக்கும். செம்பு என்றால் களிம்பு இருக்கும். நீர் என்றால் சேறு இருக்கும். குழந்தைகள் என்றால் சேஷ்டை செய்யும். மனைவி என்றால் அடம் பிடிப்பாள்.

அதுபோல ஆன்மாவுக்கு ஆணவ மலம் உண்டு. இந்த ஒரு மலத்தைப் போக்குவதற்குப் பகவான் இரண்டு மலங்கள் கொடுத்தார். கன்ம மலம், மாயா மலம். ஒரு மலத்தைப் போக்க இருமலத்தைக் கொடுத்தார். உங்களுக்கு என்னதோன்றும்? ஒன்றைப் போக்க இரண்டா? காலிலே முள் தைக்குமானால் பெரிய முள்ளை எடுத்துக் குத்துவார்கள். முள்ளை முள்ளாலே போக்க வேண்டும். வைரத்தை வைரத்தாலே அறுக்க வேண்டும். துணியிலே இருக்கிற அழுக்கை உவர் மண் போட்டுத் துவைக்கிறார்கள். 'வாயை மூடு' என்று சத்தத்தாலே சத்தத்தை அடக்குகிறார்கள். அதுபோல மலத்தை மலத்தாலே போக்க வேண்டும். ஆணவமலத்தைக் கன்மமலம், மாயாமலங்களாலே போக்க வேண்டும். எனவே மூலமலம் ஆணவ மலம், அதனைப் போக்கவல்லது கன்மமலம். அதைக் கழிக்க வல்லது மாயாமலம், மூன்று மலங்கள்.

சனகாதி முனிவர்கள் சிவபெருமானிடம் உபதேசம் கேட்க வந்தார்கள். பிரும்ம குமாரர்கள்: சனகர், சனந்தனர், சநாதனர், சனத் குமாரர். அந்த நால்வர்கள் வந்து ஆண்டவனே எமக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்கள். சுவாமி ஒன்றும் சொல்லவில்லை.

இப்படி என்றார். என் கையைப் பாருங்கள்; அப்படி, இது என்ன தாத்பர்யம். யாராவது நம் வீட்டுக்கு வந்தால் நாம் அப்பொழுது மனைவியைப் பார்த்து தாகத்துக்குக் காபியோ, மோரோ ஏதாவது கொண்டு வா என்போம். அந்தக் குறிப்பினாலே உணர்த்துவது. கண்ணாலும் சொல்வார்கள். கொஞ்சம் அறிவு குறைந்தால் கையாலே சொல்வார்கள். அறிவு அதிகமாய் இருந்தால் கண்ணால் சொல்வார்கள். நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இருக்கிற சந்நிதானத்துக்கு நான்கு சந்நிதானத்துக்கு முந்தி திருவாடுதுறையிலே அம்பலவாண மகா சந்நிதானம் என்று ஒருவர் இருந்தார். ஞானத்தின் வடிவமாம். அப்படிப் பார்ப்பாராம். அந்தப் பார்வையிலேயே தொகையைச் சொல்வாராம், கொண்டு வந்து கொடுப்பதற்கு. தசரதராஜா சீதா கல்யாணத்துக்குப் போனார், மனைவியிடம் சத்தம் போட்டுப் பேசினால் கூட்டத்தில் தாய்மார்கள் கூச்சப்படுவார்கள். அந்தக் கல்யாணத்திலே ராஜா மனைவியிடம் கையாலே பேசினானாம். தோழி வந்து கண்ணாலே கேட்டாளாம். இவள் கடைக்கண்ணாலே சொன்னாளாம். கம்பர் சொன்னார். 'தாழ நின்ற...... ஒருவன் உரைத்தான் ........ தோழி கடைக்கண்ணில் சொல்லினாள்' எல்லாம் நாகரிகம்-கம்பர் சொல்லுவது.

அதைத்தான் சனகாதி முனிவர்க்குச் சிவபெருமான் கையாலேயே உணர்த்துகிறார். சில சங்கீத வித்வான்களுக்கு மேல் பஞ்சமம் எட்டாது. ஸ,ரி,க,ம,ப வுக்கு அப்படிக் கையைக் காட்டி விடுவார்கள். எட்டவில்லையென்றால் என்ன செய்வது? கையாலேதான் காட்டியாக வேண்டும்? சாரீர சம்பத்து இருந்தால் பஞ்சமம் எட்டலாம். இல்லாதவன் என்ன செய்வான்? அது போல பரமேசுவரன் நால் திசைக்கும் கை காட்டிச் சொன்னானாம். இதற்கு என்ன பொருள்? முதலிலே இப்படிப் பாருங்கள். அப்புறம் அப்படிப் பாருங்கள். அப்புறம் இப்படி. இதுதான் (நடுவிரல்) உயரமாய் இருக்கும். ஆனால் இதற்குத்தான் பெருமை. பெருவிரல் நாலு பேர் செய்யும் வேலையை ஒருவன் செய்தால் ஏன் பெரிய மனுஷன் என்று சொல்லக் கூடாது? சில்லறைகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்திருக்கும். பெரிய மனுஷன் அந்தப் பக்கம் போய் விடுவான். எல்லாம் சில்லறை. அப்போ இது பதி-கடவுள். இது சுட்டிக் காட்டுகிறது ஜீவாத்மா; பசு; இதற்குப் பக்கத்திலே உயரமாக நிற்கிறது, ஆணவ மலம். இந்த விரல் சுண்ணாம்பு தீட்ட, ஆள் காட்ட, மோதிரம் சூட்ட, மலர்க் கண்ணாரைக் கூட்ட, விரல் நான்கு இருக்க, இந்த நடுவிரல் உயரமாய் இருக்கும். ஆனால் ஒன்றுக்கும் உதவாது. விலாசம் பெரியதாய் இருக்கும். நல்ல காரியத்துக்கு நாலணா தரமாட்டான். அவனுக்கெல்லாம் நடுவிரல் என்று பெயர். படிக்காசு பாடுகிறார்.

"சுண்ணாம்பு தீட்டநல் ஆள்காட்ட
மோதிரஞ்சூட்ட மலர்க்
கண்ணாரைக் கூட்டவிரல் நான்கிருக்கக்
கதிர்க்கம்பிபோல்
எண்ணா நடுவிரற் கேதாம் உலோபருக்
கேதுகண்டாய்
கண்ணார் நுதலண்ணல் சேய்வணிகா
செந்தில் காத்தவனே."

என்று படிக்காசு பாடுகிறார்.

அந்த உயரமாய் நிற்கிற விரல் ஆணவ மலம். அந்த மோதிரம் அணிகின்ற விரல்தான் காரியம் செய்யும். (தர்ப்பை மோதிரம்) சிறு விரல் மாயாமலம். ஆணவம், கன்மம், மாயை இந்த மூன்று மலங்களோடு ஆத்மா சேர்ந்திருக்கிறது. பரமாத்மா தனியாக இருக்கிறது. தூக்கத்திலே இருக்கிற சுகத்தைவிட, தியானம் பண்ணினால் அதைவிடக் கோடி மடங்கு சுகம் வரும் தியானத்தாலே. ஆகையினாலே இறைவன் திருவடியை இந்த ஜீவன் சேருகிறது. இங்கே பாருங்கள். மாயாமலம், கன்ம மலம், ஆணவ மலம் ஆகிய மும்மலத்தை விட்டு ஜீவன் சிவனை அடைகிறது. இப்படி நாளாக நாளாக ஆக எப்படி குமாஸ்தாவாக இருக்கிறவன் (பார்ட்னராக) கூட்டாளியாக ஆகிறானோ இதுபோல அடிமையாய் இருந்த ஜீவன் சிவமோடு ஒன்றுபட்டு விடுகிறது. இப்பொழுது ஜீவனும் சிவனும் ஒன்றாகி விட்டன. அப்புறம் சாதக சின் முத்திரை. இது சாத்திய சின் முத்திரை. இது போதக சின் முத்திரை.

- தொடரும்

நன்றி : செஞ்சொல் உரைக்கோவை நூல்

# அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்

விரையார் கொன்றையினாய் விடமுண்டமிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தென்கடல்சூழ் திருவான்மி யூர்உறையும்
அரையா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.(1)
- திருஞானசம்பந்தர் -

மந்த மாகிய சிந்தை மயக்கறுத்(து)
அந்த மில்குணத் தானை யடைந்துநின்(று)
எந்தை ஈசன்என் றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூர் ஈசனே (3)
- திருநாவுக்கரசர் -

தருமமிகு சென்னையின் தென் எல்லையாக அருள்மிகு மருந்தீசுவரர் ஆட்சி செய்யும் திருவான்மியூர் திருத்தலம் அமைந்துள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் ஒருங்கே பெற்று சிறந்த பிரார்த்தனை தலமாக விளங்குகிறது. அகத்தியருக்கு மூலிகையின் தன்மை பற்றி பூரண அறிவையளித்த மருந்தீசுவரரைப் பிணியாளர்கள் உளமார வழிபட்டு நோய் நீக்கம் பெறுகின்றனர்.

## பஞ்ச தீர்த்தம் :

திருவான்மியூர் திருத்தலத்தில் அமைந்திருக்கும் தீர்த்தங்கள் ஐந்தும் இறைவன் சிரசில் உள்ள கங்கையிலிருந்து விழுந்த ஐந்து துளிகளால் அமைந்ததாகும். அவை ஜென்மநாசினி, காமநாசினி, பாபநாசினி, ஞானநாசினி, மோட்சதாயினி என்ற ஐந்து தீர்த்தங்கள் ஆகும். சூரியன், பிரம்மா, யமன், பார்த்தசாரதி, இந்திரன், இராமர், சந்திரன் ஆகியோர் ஐந்து தீர்த்தங்களில் நீராடி சிவபூசை செய்து பாவ விமோசனம் பெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது.


## வரலாற்றுச் செய்திகள் :

இத்தலம் மிகவும் பழமையான திருத்தலம். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்றோரால் பாடல்பெற்ற திருத்தலமாகும். மேலும், இத்தலம் புராணவழி நோக்குமிடத்து, திருமால் பார்த்தசாரதி, வான்மீகி முனிவர் போன்றோர்கள் வழிபட்டமையால் மகாபாரத காலத்திலேயே இத்திருத்தலம் சிறப்புற்று விளங்கியது என்பதற்குச் சான்றாகும். சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் திருவான்மியூர் தலப்பெருமை குறித்துப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு வருகை புரிந்து முருகப் பெருமானை வணங்கித் திருப்புகழ் பாடியுள்ளார். அப்பைய தீட்சிதர் வந்து இறைவனை வணங்கியதாக செவிவழிச் செய்தியும், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இங்கு வழிபட்டதாகவும் அவர் முருகப் பெருமானைப் பற்றிப் பாடல்கள் பாடியதாகவும் இலக்கியச் சான்றுகளில் கூறப்பட்டுள்ளன.

## திருக்கோயில் அமைப்பு :

தென்கிழக்குக் கடற்கரையோரத்தில் திருவான்மியூரில் மையப் பகுதியினில் கிழக்கு கடற்கரை சாலையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. கிழக்கு மேற்கு ஆகிய இருவாயில்களில் 5 நிலை கோபுரங்கள்வண்ண சுதைச் சிற்பங்கள் தாங்கி மிகவும் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. கிழக்குக் கோபுரத்தை வணங்கி உள்ளே நுழைந்தால் விஜய கணபதி சந்நிதியில் விஜயகணபதி நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். விஜய கணபதியின் சந்நிதியையடுத்து முருகப் பெருமானின் தனிச்சந்நிதி முன்மண்டபத்துடன் இணைந்துள்ளது. இங்கு முருகப்பெருமான்





காமதேனு தினமும் பாலாபிஷேகம் செய்து துதித்ததால், பால்வண்ணநாதர் என்ற திருநாமமும், உலகில் தோன்றியுள்ள நோய்களின் தன்மையையும், அவற்றைத் தீர்க்கக்கூடிய மூலிகைகளின் இயல்புகளையும் அகத்திய முனிவருக்கு உபதேசித்ததால் மருந்தீசுவரர் (ஔஷதீஸ்வரர்) ஆகிய பெயர்கள் உண்டாயின. நான்கு வேதங்கள் பூசித்ததால், வேதபுரீசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது. பாற்கடலில் தோன்றிய அமுதத்தால் வானவர்கள் இவருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டமையால் அமுதீஸ்வரர் என்ற பெயருடைய மருந்தீசுவரர் என்ற பெயர் நிலைத்தது.

நின்ற கோலத்தில் இருபுறமும் வள்ளி, தெய்வானை ஆகிய இருவருடனும் காட்சியளிக்கிறார்.

தியாகர் சந்நிதி உள்ள தியாகராஜர் சபா மண்டபத்தினுள் தியாகராஜர், அம்மன், தனியம்மன் ஆகிய விக்ரகங்கள் உள்ளன. பௌர்ணமி நாட்களிலும் மற்றும் சிறப்பு நாட்களிலும் அருள்மிகு தியாகராசர் திருவீதியுலா மற்றும் 18 திருநடனக் காட்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெறும். இச்சந்நிதியின் முன்புறம் வலப்பகுதியில் கமல விநாயகரும் அருகே உள்ள தூண்களில் ஆஞ்சநேயரும் அவருக்கு எதிராக தண்டாயுதபாணியும் காட்சி தருகின்றனர். ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாத்தியும், இராமநாமத்தை எழுதி மாலையாக அணிவித்தும் வழிபடும் பக்தர்கள் ஏராளம். இம்மண்டபத்திலுள்ள நுழைவாயில் வழியாக மருந்தீசுவரர் சந்நிதி அமைந்துள்ள மண்டபத்தை அடையலாம். இம்மண்டபத்தின் மையப்பகுதியிலுள்ள சந்நிதி, கருவறை, அர்த்தமண்டபம் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. மூலஸ்த்தானத்தில் அருள்மிகு மருந்தீசுவரர் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார். முழுமுதற்கடவுளான சிவபெருமான் வடிவமின்றி அருவநிலையிலுள்ள போதிலும் அடியவர்களுக்கு அருள் வழங்கும் எண்ணத்துடன் 64 வகையான வடிவங்களை எடுத்துள்ளார். இவ்வாறு கண்ணுக்குப் புலப்படக் கூடிய உருவ வடிவத்தையும், கண்ணுக்கு தென்படாத அருவத்தையும் ஒரே அமைப்பில் காட்டும் அடையாளமே சிவலிங்கமாகும்.

வான்மீகி முனிவரால் வழிபடப் பெற்றதால். வான்மீகிநாதர் என்ற பெயரும்,

இம்மண்டபத்தின் தெற்குப் பகுதியில் விநாயகருடன் துவங்கி அனைத்து நாயன்மார்களும், தொகையடியார்களும் முறையாக வரிசையில் இடம் பெற்றுள்ளனர். அடுத்து கஜலட்சுமி மலர் செண்டை ஏந்தியவாறு அமைந்துள்ளார். இதனையடுத்து வீரபாகு. அருணகிரிநாதர் ஆகியோர் இருபுறமும் தோன்ற தேவியருடன் முத்துக்குமார சுவாமி காட்சியளிக்கிறார். வடக்கில் உற்சவத் திருமேனிகள் அனைத்தும் பொலிவுடன் தோற்றமளிக்கின்றன. அடுத்து சபையில் நடராஜர், சிவகாமி அம்மையாருடன் உலோகத் திருமேனியில் காட்சியளிக்கிறார். சபையையடுத்து 108 சிவலிங்கங்கள் 12 வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியின் இறுதியில் சூலம், உடுக்கை, சர்பம் ஆகியவற்றை கரங்களில் ஏந்தியவாறு காலபைரவர் காட்சியளிக்கிறார். இம்மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் பஞ்சலிங்கங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இவற்றுள் முதலாவதாகப் பெரிய அளவில் உள்ள சிவலிங்கமாகிய கேதாரீசுவரரை தீபாவளி காலத்தில் கேதாரகௌரி விரதம் இருப்போர் பூசிப்பது வழக்கம். அண்ணாமலையாரும் உண்ணா முலையம்மையும் இப்பகுதியில் உள்ளனர். இவ்வரிசையின் இறுதியில் சூரியபகவான் நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறார். கருவறையின் வடக்குக் கோஷ்டத்தில் முதலாவதாக எருமைத்தலை மீது துர்க்கையம்மன் எழிலுருவத்துடன்

காட்சியளிக்கிறார். செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் அதிக அளவில் பக்தர்கள், குறிப்பாக மகளிர் துர்க்கையம்மனை வழிபடுவதுண்டு. அருகே கோஷ்டத்தில் நான்முகன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். கிழக்கு நோக்கியுள்ள கோஷ்டத்தில் சங்கு, சக்கரத்தை ஏந்தியவாறு நின்றகோலத்தில் திருமால் பக்தர்களுக்கு அருள் புரிகிறார். தென்திசையில் தென்புறக் கோஷ்டத்தில் தென்முகக் கடவுளை (தட்சிக்ஷிணாமூர்த்தி) தரிக்கலாம். அடுத்து நர்த்தன விநாயகரை வழிபடலாம்.

அம்பாள் சந்நிதி கருவறை, முன் மண்டபம், வெளி மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு தனிப்பிரகாரத்துடன் அமைந்துள்ளது. வெளிமண்டபத்தில் அழகிய சிற்பங்கள் கண்கவரும் வண்ணம் தூண்களில் காணப்படுகின்றன. அடுத்து அம்பாள் கருவறையில் அருள்மிகு திரிபுரசுந்தரி நான்கு திருக்கரங்களுடன் அருள்பாலிக்கிறார். இங்கு அம்பாள் திரிபுரசுந்தரி நின்ற கோலத்தில் வரும் பக்தர்களுக்கு அருள்புரிகிறாள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் திருவிழாக் கோலமாக அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் சுக்கிவார அம்மனாக உட்புறப்பாடு நடத்தப்பெறுகிறது. அம்பாளின் அழகைக் காணக் கண்கோடி வேண்டும். அன்னையைக் காணும் கண்களே பாக்கியம் செய்தவை. அம்பாள் சன்னதிக்கு முன்னர் சிம்ம வாகனமுள்ளது. அதனருகே ஸ்ரீ சக்கரம் நிறுவப்பட்டுள்ளது. மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் உற்சவரான சுக்கிரவார அம்மன் காட்சி தருகிறார். வெளிமண்டபத்தின் தூணில் தவம்புரியும் காமாட்சியம்மன், சரபேசுவரரும், நரசிம்மர், குபேரர் மற்றும் சடநடசித்தர் ஆகியோர் பக்தர்களுக்கு காட்சி தருகிறார்கள்.

கிழக்குக் கோபுர வாயிலுக்கு வெளியே சித்திரைக் குளமும் அதன் கரையில் இராமநாதர் சந்நிதியும் உள்ளன.

திருவான்மியூர் தலவரலாறு :

பிரம்மாவின் நேர்வழித் தோன்றலாகிய பிரசேத குமாரர் வேடுவர்களுடன் கூடி தீய குணமுடையவராக விளங்கினார். ஒரு சமயம் தலைகீழாகத் தவம் செய்யும் ஒரு முனிவரைப் பார்த்து அவரைக் கொல்ல நினைத்து தோல்வி அடைந்து மனம் மாறி அவர் தவம் முடிக்கும் வரை காத்திருந்து அறிவுரைகள் கேட்டு கங்கைக் கரையில் தவக்கோலம் பூண்டு முனிவரானார். அப்போது சத்தியலோகத்தில் பிரம்மா மூலம் இராமகதையை அறிந்த நாரதர்



இந்த புண்ணிய நிகழ்ச்சி எல்லோருக்கும் தெரியவேண்டுமென்று முனிகுமாரர் தவமிருந்த கங்கைக் கரையில் வந்து உரைத்தார். அவ்வுரை கேட்ட முனிவர்தான் 'வான்மீகி' என்றழைக்கப்பட்டார். அவர் அதை இராமாயணம் என்ற காப்பியமாக இயற்றினார். அவர் மீண்டும் தவம் செய்த போது மார்க்கண்டேயரைச் சந்தித்து "தென்திசை நோக்கிச் செல். புண்ணிய இடத்தில் நான் இங்கு இருக்கிறேன் என்று அசரீரி ஒலி கேட்கும். அந்த இடத்தில் இறைவன் உனக்கு முக்திப்பேறு கொடுப்பார்" என்று கூறினார். அவ்வாறே தென்திசை நோக்கி வந்துகொண்டிருந்த போது கிழக்கு கடற்கரை ஓரத்தில் "நான் இங்கிருக்கிறேன்" என்ற ஒலி கேட்க, ஒரு வன்னி மரத்தடியில் இறைவன் காட்சியளித்தார். அப்போது வான்மீகி முனிவர் இங்கு தாங்கள் உமையம்மையோடு அமர்ந்து, பக்தர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்றும், இத்தலம் அமைந்துள்ள இடம், என்னுடைய திருநாமத்திலேயே விளங்க வேண்டுமென்றும் வரம் கேட்க, அவ்வாறே இறைவன் வரமளித்தார். அன்றுமுதல் இத்தலம் திருவான்மீகி பெயரால் "திருவான்மியூர்" என்று பெயர் பெற்று விளங்கி வருகிறது.

பூமியை சமன் செய்ய வேண்டி,

தென்திசை நோக்கி வருகை தந்த அகத்தியருக்கு, வயிற்று வலி எடுக்க அவர் இறைவனை நினைந்தவுடன் இறைவன் உமையம்மையோடு காட்சியளித்து மருந்தும் அதன் வகைகளையும் கூற அகத்தியர் நலம் பெற்றார்.அதனால் இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் "மருந்தீசுவரர்" என்றழைக்கப் பெறுகிறார்.

இத்தகு சிறப்புகள் கொண்ட இத்திருக்கோயிலுக்கு எழுநிலை மாடங்கள் கொண்ட கான்கிரீட்டால் ஆன இராசகோபுரம் அமைக்கும் பணி 1964ம் ஆண்டு சக்தி நிறுவனங்களின் தலைவர் திரு. பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களின் சீரிய முயற்சியால் துவங்கப்பட்டது. நிறைவு பெறாத நிலையில் மொட்டை கோபுரமாக இருக்கும் இராஜகோபுரத் திருப்பணி 2007-2008 நிதியாண்டில் முடிக்கப்படும் என மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து இத்திருப்பணியைத் தொழிலதிபர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களோடு இணைந்து திருவான்மியூர் வெள்ளிக்கிழமை விழாக்குழுவின் தலைவர் திரு. என் இராஜப்பன் அவர்களும், வெள்ளிக்கிழமை விழாக்குழுவினரும் இணைந்து ரூ. 50./ லட்சம் மதிப்பீட்டில் இராஜகோபுரத்தைத் திருப்பணி செய்ய முன் வந்துள்ளனர். அதற்கான திருப்பணி துவக்க விழா 14.07.07 அன்று நடைபெற்றது கண்டு திருவான்மியூர் பெருமக்களும், சமயச்சான்றோர்களும், ஆன்றோர்களும் பேருவுவகை கொண்டுள்ளனர்.

இத்தலம் நோயாளிகளுக்கு நல்மருந்தாகவும், பாவ விமோசனத் தலமாகவும் விளங்குகிறது. இத்தகு சிறப்புகள் கொண்ட திருவான்மியூர் திருத்தலத்திற்கு சென்று மருந்தீஸ்வரர் மற்றும் திரிபுரசுந்தரியின் அருள்பெற்று வாழ்வில் வளம்பெறுவோமே.




திருப்பணி துவக்க விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களின் துணைவியார் திருமதி. பெ. பிரேமா அவர்கள், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. து. இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் சென்னை இணை ஆணையர் திரு. ப. தனபால் அவர்கள் ஆகியோர்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-600 034.
தொலைபேசி எண் : 28334811 / 12 / 13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி, பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை-86.
தொலைபேசி : 23450920 / 28117575






சென்னை, மைலாப்பூர், அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்திலும், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்திலும் நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம் கட்டப்பட உள்ள இடங்களை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் 23.07.07 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.





தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய திருக்கோயில்களின் நிர்வாகம் சொத்துக்களை பாதுகாத்தல், பராமரித்தல், திருப்பணி வேலைகள், கட்டுமான பணிகள், பக்தர்களின் நலனுக்காக அடிப்படை வசதிகள் செய்தல், நலத்திட்ட பணிகள் போன்ற பணிகள் தொடர்பாகவும், திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் கல்வி நிலையங்கள், அர்ச்சகர் பயிற்சி பள்ளிகள், மற்றும் கருணை இல்லங்களின் செயல்பாடுகள் குறித்தும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களின் தலைமையில் திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்கள் கலந்து கொள்ளும் சீராய்வு கூட்டம் மாவட்ட வாரியாக 27.07.2007 முதல் துவங்கப்பட்டுள்ளது.

27.07.2007 அன்று துவங்கப்பட்ட முதல் கூட்டத்தில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர் பெரியகருப்பன் அவர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள், அறங்காவலர் குழுத் தலைவர்கள், அறங்காவலர்கள் மற்றும் அலுவலர்கள்.

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08


CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

# CITY UNION BANK LIMITED
GEORGE TOWN, CHENNAI - 1.

*Attractive Deposit Scheme with Interest*

CUB 500 Upto 11%

*Conditions apply

*Other Deposit Schemes*

CUB AKSHAYA

10.50%

For More Details Contact :

No. 50, Armenian Street, George Town, Chennai - 600 001.
Ph. : 044 - 25342340, 25340186, 25343135
Cell : 93802 86555 / 93826 42065

❖ Any Branch Banking ❖ Internet Banking ❖ ATMs ❖ Electronic Money Transfers